1987

★

பங்குனி

# தொண்டன்




★ கிறீத்தவ இலக்கியத் திங்களேடு ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

பங்குனி — 1987
மலர்: 19 இதழ்: 02

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.
SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-

உள்ளே...

1. இதயத்திலிருந்து — 1
2. இறப்பில் மலர்ந்த... — 2
3. ஆணவத்தின் முடிவு — 5
4. இளைஞர் அரங்கம் — 6
5. சொந்தம் எப்போதும் — 9
6. திருமறையைத் தெரிந்து — 11
7. சர்வதேச கத்தோலிக்க — 14
8. கவி ஆரம் — 16
9. வெள்ளி விழா யாழ்... — 18
10. சுதந்திரம் — 20
11. விடுதலை - இறையியல் — 22
12. விருந்தோம்பல் — 23
13. பலியும் வாழ்வும் — 24
14. குறுக்கெழுத்துப் போட்டி — 27

## பழைய பிரதிகள் தாரீரோ!

1969ம் ஆண்டு முதல் 1983ம்ஆண்டுவரை வெளிவந்த தொண்டன் பிரதிகளை பாதுகாத்து வைத்திருக்கும் வாசகர்கள் தயவுசெய்து எம்மோடு தொடர்புகொள்ளு மாறு வேண்டுகிறோம். குறிப்பிட்ட காலப் பிரதிகள் கைவசம் இல்லாமையால் அவற்றைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்புகிறோம். பிரதிகள் வைத்திருப்போர் அவற்றை எமக்கு அளிக்க விரும்பினால் வைத்திருக்கும் பிரதிகள் எண்ணிக்கையையும் ஆண்டு, மாதம் முதலியவற்றையும்குறிப்பிட்டு எமக்கு அனுப்புமாறு அன்புடன் கேட்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நம் பாவங்களுக்காகவே அவர் காயப்பட்டார். இசை 50/7




# இதயத்திலிருந்து...

மீட்பின் பாதை சிலுவைப்பாதை.

துன்பமும், நோவும், கண்ணீரும், அவமானமும் கலந்த துயரப்பாதை அது.

எமது நாட்டில் தமிழினத்தின் பாதையும் சிலுவைப் பாதை போன்றதுதான்.

இன்று எல்லா நாடுகளாலும் தள்ளிவிடப்பட்டு அகதியாகி அலேகின்ருன் தமிழன். கண்ணீரிலும், தண்ணீரிலும் தத்தளிக்கின்ருன். சிலுவைப் பாதையில் பாடுகள் மட்டுமன்று மரணமும் உண்டு.

இன்று தமிழனது பாடுகளும் தரணியெல்லாம் துடிக்கும் அளவுக்குப் பெருத்துள்ளன. சாவு அவனுக்கு சர்வசாதாரணமாகிவிட்டது.

முன்ஞயத்தமும் முழுமையான ஈடுபாடும் இல்லாமலேயே தமிழினம் ஒரு போராட்டத்துக்குள் புகுந்துவிட்டது.

சிலுவைப்பாதையின் உச்சமான மரணத்தின் கொடிய நிழல் தமிழன் வாழும் நிலமெங்கும் படிந்துள்ளன.

இந்நிலேயில் அடுத்து என்ன? என்ற கேள்விக்கு விடை தெரியாது நம்பிக்கைகள் நலிந்த நிலேயில் உதவிக்கு வருவர் என எதிர்பார்த்தவர்களும் கைவிட்டுவிட்டனரே! என்ற ஏக்கக் குரல் வெடித்துக் கிளம்புகிறது.

ஆனுல், சிலுவைப்பாதை அது மீட்பின் பாதை. தோல்வியில் வெற்றிகாணும் பாதை. சாவில் உயிர்க்கும் பாதை.

இதுவே நமது விசுவாசம், ஒரே நம்பிக்கை, இது தமிழினத்தின் பாதையுமாகுமா? நாம் ஏற்றுக்கொண்ட வழி நீதியானது நேர்மையானது என்று எம்மால் கூறமுடியுமா ?

எதிர்ப்படும் எத்தகைய இன்னல்களேயும் இழப்புகளேயும் தாங்கும் நெஞ்சுரம் எமக்கு உண்டா? சாவின் எல்லேயிலும் சத்தியத்துக்குக் குரல் கொடுக்கும், சான்ருய் இறக்கும் இலட்சியப் பற்று வாய்க்குமா? ஒரே குறிக்கோளில் ஒன்றுபட்டு நிற்கும் தோழமை உணர்வு தோன்றுமா? தோன்றவில்லேயே என்று ஏங்குகிருேம். சிலுவைப்பாதை எமக்கு வழிகாட்ட வேண்டுமென்று வேண்டுகிருேம்.

**சி. பி. இராஜேந்திரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறப்பில் மலர்ந்த தனித்துவம்



— அருள்திரு. பி. ஜோசப் —

ஆயிரமாயிரம் ஆண்டவனின் பக்தர்கள்
ஆலயங்கள் தோறும் அணியணியாக நின்று
ஆணிகொண்ட திருக்காயங்களை அன்புடன் முத்திசெய்து
ஆண்டவனை ஆராதிக்கின்ற இந்த நாளிலே
இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்
மண்டை ஓடு எனப்படும் கல்வாரி மலையிலே
கழுமரத்திலே தனிமரமாக
இருகள்வர்கள் நடுவில் இறைமகன் இயேசு
தொங்கிய காட்சியினை என் மனக்கண்முன் நிறுத்துகின்றேன்
உயிரற்ற அவருடலை உற்று நோக்குகின்றேன்.
பிறருக்கு உயிரைக் கொடுத்த பரமன்
நன்னுயிரைத் தந்தைக்கு அர்ப்பணித்துவிட்டு
உயிரற்ற நிலையில் தொங்கும் காட்சியினை
உற்று நோக்கும்போது ஊற்றெடுக்கும்
உண்மைகள்
அப்பப்பா, ஆயிரமாயிரம்
சொல்லிலும் அடங்காது - சொன்னாலும்
புரியாது
அனைத்தையும் அர்ப்பணித்துவிட்டு
அந்தரத்தில் தொங்குகின்றார்.
மனிதன் எவற்றையெல்லாம் விடாமல்
பற்றிப் பிடித்துக்கொண்டு
வாழவிரும்புகின்றானோ அவற்றையெல்லாம்
படிப்படியாக விட்டுவிட்டு தம்மையே
வெறுமையாக்கி
முழுவிடுதலை பெற்ற வெற்றிவீரனாகத்
தொங்குகின்றார்.
ஆடையைக் கழற்றி நிர்வாணமாக்கினார்கள்
அவரோ
அனைத்தையும் துறந்துவிட்டு முழுநிர்வாணம்
எய்திவிட்டார்
அதிலே அவரது தனித்துவத்தைக்
காண்கின்றேன்.
பிறந்தவர் எல்லோரும் இறக்க
வேண்டுமென்பது
இயற்கைத்தாய் விதித்த நியதி
இம்மண்ணில் பிறந்த ஒப்பற்ற உயிராக
இருந்தாலும்
ஒருநாள் அழிந்தே தீரும்.
ஒரு சிலருக்கு இறப்பு ஒரு இழப்பு. ஆனால்
இயேசுவுக்கோ இறப்பு ஒரு மறு பிறப்பு
இயேசுவின் இறப்புத்தான் அவரது உயிர்ப்பு
இதிலேதான் அவரது தனித்துவத்தைக்
காண்கிறேன்.
அவரது இறப்பின் காரணத்தை அவரே
விளக்கியுள்ளார்.

## இதுவும் திருட்டுத்தான்

மற்றவர்களின் பொருளைத் திருடினால் மட்டும்தான் திருட்டு என்று நினைப்பது தவறு. மற்றவர்களின் சுதந்திரத்தைத் திருடினாலும் திருட்டுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கோதுமை மணி மண்ணில் மடிந்தால்தான்
பலன் அளிக்க முடியும்
ஒளியானது தன்னை எரித்துக்கொண்டால்தான்
பிறருக்கு ஒளியைக் கொடுக்கமுடியும்
உப்பானது தான் கரைந்தால்தான்
உணவுக்கு உருசியைக் கொடுக்கமுடியும்
கோதுமைமணி, ஒளி, உப்பு இவையனைத்தும்
தங்களது பெறுமதியை, மதிப்பை
நிரூபிப்பதற்கு
ஒரேவழி தங்களையே இழக்கவேண்டும்.
படிப்படியாக அழித்துக்கொள்ள வேண்டும்.
நெருப்பின்றி புகையில்லை
மலரின்றி மணமில்லை
இறப்பின்றி உயிர்ப்பில்லை
இவையிரண்டும் ஒரு நாணயத்தின்
இரு பக்கங்கள் போன்றவை.

இயேசு இறந்ததால்தான் வாழ்வை
வெற்றிகொண்டார்.

தன்னையே வெறுமையாக்கியதால்தான்
அனைத்தையும் பெற்றுக்கொண்டார்
அக்காலத்தில் ஒரு மனிதனுக்குக்
கொடுக்கக்கூடிய
மிகக் கேவலமான - அவமானமான தண்டனை
சிலுவை சுமப்பதும், சிலுவையில்
அறையப்படுவதுமாகக் கருதப்பட்டது.
உரோமைப் பேரரசில்
பெரிய குற்றவாளிகளுக்குக் கொடுக்கப்படும்
மிகக் கொடுமையான தண்டனை
இதுதான்.
அத்தகைய தண்டனை இயேசுவுக்குக்
கிடைத்தது.
குற்றமற்றவர் குற்றவாளியைப்போல்
நடத்தப்பட்டார்.
தன் சிலுவையைத் தானே சுமந்துசென்றார்.
இதிலும் இயேசுவின் தனித்துவம்
நிலைநாட்டப்படுகின்றது.
ஆடைகளை உரிந்து அவமானப்படுத்துகின்றனர்
வேடிக்கை பார்த்தவர்கள் எள்ளி
நகையாடுகின்றனர்
நன்மை பெற்றவர்களும், நண்பர்களும்
நான்கு சுவர்களுக்குள் ஓடி ஒளிந்துவிட்டனர்.
ஒருசிலர் ஓடாவிட்டாலும் உதவமுடியாது
நாதியற்றவர்களாக நடுங்கி நிற்கின்றனர்
ஏன், தன் தந்தையே தன்னைக்
கைநெகிழ்ந்து விட்டதாக
இயேசு உணர்கின்றார்.

என் தேவனே, என் தேவனே
ஏன் என்னைக் கைநெகிழ்ந்தீர்
என்ற சொற்களில் அவரது வெறுமையின்
உச்சத்தொனி ஒலிக்கின்றது
நண்பர்களை, நன்மை பெற்றவர்களை
நற்பெயரை, நற்கீர்த்தியை
தன் தந்தையின் உதவியை, ஆதரவை
தன் வாழ்வையே இழந்தாலும்
தன்னை அவர் இழக்கவில்லை
தனித்துவத்தை நிலைநாட்டிவிட்டார்.
அனைத்தையும் இழந்தாலும் அனைத்தையும்
அடைந்துவிட்டவராக
வெற்றிப் பெருமிதத்தில் மகிழ்ச்சியுடன்
தொங்குகின்றார்
அதில்தான் அவரது தனித்துவம்
கொடிகட்டிப் பறக்கின்றது.
முழுமையாகத் தம்மை வெறுமையாக்கி
முழுமையான விடுதலையைப் பெற்றுவிட்டார்
ஆம், மனிதனை அடிமையாக்கும்,
மனிதனது மகிழ்ச்சியைச் சீர்குலைக்கும்
எதுவும் அவரைப் பற்றிப்பிடிக்கவில்லை.
பற்றனைத்தையும் சுக்குப்பொடியாக்கிவிட்டு
தன்னை அவற்றின் பிடியிலிருந்து
விடுவித்துக்கொண்டார்.
தனக்கென வாழாது பிறர்க்கென
வாழ்வதையே
தமது பிறப்புரிமையாய்க் கொண்டவர்
தமது வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்தையும்
மனிதகுல மீட்புக்காகச் செலவிட்டவர்
தமது இறுதி வார்த்தையில்...
''பிதாவே உம் கரங்களில்
என் ஆவியை ஒப்படைக்கின்றேன்'' என்றுகூறி
இறுதி மூச்சையும் இறைவனிடன்
ஒப்படைக்கின்றார்.
இதிலும் இயேசுவின் தனித்துவம்
துலங்குகின்றது
மிகவும் இழிவான தண்டனையாகிய
சிலுவைச் சாவை
அவர் விரும்பி ஏற்றார்.
மனிதரால் வெறுக்கப்பட்ட, வேண்டாமென்று
ஒதுக்கப்பட்ட கழுமரம்
விண்ணகத் தந்தையால் தனக்குக்
கொடுக்கப்பட்ட
விருதுக் கொடியென இயேசு
ஏற்றுக்கொண்டார்.
சிலுவைச்சாவு கிடைக்கப்பெற்றவர்கள்
வழக்கமாக அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒரு தண்டனையாகக் கருதுவர்.

ஆனால் இயேசு சிலுவை மரணத்தை
தண்டனையாக ஏற்கவில்லை
அப்படியாயிருந்தால் தம் பாடுகள் பற்றி
முன்னறிவித்திருக்கமாட்டார்
இயேசு சிலுவையை வெறுக்கவில்லை
அதைத் தன் தந்தையின் விருப்பம் என்று
ஏற்றுக்கொண்டார்.
காரணம் அவர் சாகத் துணிந்தவர்
சாகத்துணிந்தவருக்கு சஞ்சலம் ஏது?
அவர் உயிரை இழக்கவுமில்லை
அவரிடமிருந்து உயிரை எவரும் பறிக்கவுமில்லை
தாமே முன்வந்து தம் உயிரைத்
தந்தைக்கு அர்ப்பணிக்கின்றார்
எதற்காக அவர் அவ்வாறு முன்வந்து
தம்முயிரை அர்ப்பணிக்க வேண்டும்?
அவரே கூறுகின்றார்.
''ஒருவன் தன் நன்பனுக்காக தன்
உயிரைக் கொடுப்பதைவிட
மேலான அன்பு உலகில் இருக்கமுடியாது''
(அரு. 15/3)
என்கின்றார்.
மேலும் அவரை இவ்வுலகிற்கு அனுப்பிய
தந்தையின் விருப்பமும் அதுவே
என்கிறார் புனித அருளப்பர்.
''இறைவன் நம்மை எவ்வளவு அன்பு
செய்தாரென்றால்
தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பி
அவரை விசுவசிப்போர் அனைவரும்
வாழ்வு பெறும்படி செய்தார்'' (அரு. 3/16)
நாம் வாழ்வுபெற அவர் தன் வாழ்வை
அர்ச்சனையாக்கியிருக்கின்றார்
தனது பாடுகள், இறப்பு நிகழ்ச்சிகளினால்
தன்னை அடிமையாக்கவிருந்த
பற்றுக்களிலிருந்து
விடுதலை பெற இறுதிவரை போராடி
அவற்றின் பிடியினைப் படிப்படியாகத்
தளர்த்திவிட்டு
தன்னையே வெறுமையாக்கி விடுதலையடைந்த
கிறிஸ்துவை ஆராதிக்க தாழ்பணியும்
என் காதுகளில்
அன்று யெருசலேம் வீதிகளில் தொனித்த
அதே வார்த்தைகள் ரீங்காரமிடுகின்றன.
''என்னைப் பின்செல்ல விரும்புகிறவன்
தன் சிலுவையைச் சுமந்துகொண்டு
என்னைப் பின்செல்லட்டும்.
அப்படியாயின் கிறிஸ்வைப் பின்பற்றும் நானும்
சிலுவை மரணம் அடையவேண்டுமா ?
நானும் சிலுவை சுமக்க வேண்டுமா ?
கிறிஸ்துவைப்போன்று நானும்
விடுதலைபெற விரும்பினால்
என்னையே வெறுமையாக்க வேண்டும்.
என்னைப் பற்றிப்பிடித்திருக்கும்
அனைத்தையும் உதறித்தள்ள வேண்டும்
நான் பற்றியுள்ள அனைத்தையும்
பட்டென்டு விட்டுவிடவேண்டும்
என்னை அடிமையாக்கும் அனைத்தையும்
தகர்த்துவிடவேண்டும்.
கிறிஸ்து எவ்வாறு என் பாவங்களுக்காக
இறந்தார்
என்பதை விடுத்து,
நான் எவ்வாறு எனது பாவப்
பழக்கங்களிலிருந்து
விடுதலை பெறமுடியும் என்பதை
ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.
நான் வாழும்பொழுதே சாகக்
கற்றுக்கொள்ளவேண்டும்
என் பாவப் பற்றுக்களுக்காக சாகவேண்டும்
அற்ப ஆசைகளுக்காக, பந்தபாசங்களுக்காகச்
சாகவேண்டும்
ஆகவே,
நான் படிப்படியாக எனது
அடிமைத்தனங்களிலிருந்து விடுபட
முயலும்போது
கிறிஸ்துவின் இறப்பை என் வாழ்விலும்
அனுபவிக்கமுடியும்.
கிறிஸ்து அடைந்த விடுதலையை
நானும் அடையமுடியும் - உலகத்திற்கும்
எடுத்தியம்ப முடியும்
அப்பொழுதுதான் உலகமும்
எனது வார்த்தைகளை விசுவசிக்கும்
கோதுமை மணியான நான் படிப்படியாக
மடிவது எப்போது ?
ஒளியான நான் என்னையே
எரித்துக்கொள்வது எப்போது ?
உப்பான நான் என்னையே
கரைத்துக்கொள்வது எப்போது ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆணவத்தின் முடிவு !

நீலக்கடலலை வந்து நிலமடந்தையை முத்தமிட்டுச் செல்லுகின்ற, கோல எழில் கொஞ்சும் நீளக் கடற்கரை அது! அங்கே! கடல்மாதா மடிமீது இரைதேடும் மீனவர்தம் படகுகள், வள்ளங்கள், கட்டுமரங்கள் பல கரையேறிக் கிடந்தன.

இரவிலேயே மீனவர்கள் இவற்றில் தமது தொழிலுக்குப் போய்வருவதால் பகலில் அவற்றிற்கும் அவர்களைப்போலவே ஓய்வு.

அந்தக் கடற்கரையின் ஒருபுறத்தே அழகான அன்னப்பறவையின் வடிவத்திலமைந்த அழகியத்தைக் கொண்ட மீன் படகொன்று கரையேற்றப்பட்டிருந்தது. அதனையொட்டியவாறே பழமையான மரங்களாலான தாம்புக் கயிற்றைக் கொண்டு பிணைக்கப்பட்ட கட்டுமரமொன்றும் கிடந்தது.

அந்த அன்னப்படகிற்கு இந்த அவலட்சணமான கட்டுமரம் தன்னோடு சமதையாக ஒட்டிக்கிடப்பதைக் காணப் பொறுக்கமுடியவில்லை. கர்வமும் செருக்கும் அதனை ஆட்கொண்டது.

ஏய்! அருவருப்பான கட்டுமரமே! உனக்கு என்ன துணிவு என்னோடு சமனாக ஒட்டிக்கிடப்பதற்கு? என்னுடைய அழகென்ன! அந்தஸ்தென்ன! தரமென்ன! தகுதியென்ன! கேவலம் இற்றுப்போன மரங்களால் பிணைக்கப்பட்ட நீ என்னோடு ஒட்டிக்கிடப்பதா! சீ... எட்டிப் போய்விடு என எரிந்துவீழ்ந்தது.

இதனைச் செவிமடுத்த கட்டுமரம் அமைதியாகப் போசலாயிற்று. 'ஐயா! பெரியவரே ஏதோ பெரிய அழகு அந்தஸ்து அது இதென்று கருவிக்கொள்கின்றீரே! உமக்கு வரலாறு தெரியாது போலும்! அதாவது யார் முதலில் தோன்றியவன் என்பது புரியுமா உமக்கு? நான் உண்டாகிய பின்தானையா உன்னையெல்லாம் கண்டுபிடித்தது. எனவே வரலாற்றை மறந்து பேசாதீர்' என்று கூறிற்று.

கட்டுமரத்தின் பேச்சு மின்சாரப் படகிற்கு ஆத்திரத்தை மூட்டிற்று. புத்திமட்டமானவனுக்கு ஆத்திரந்தானே வரும்.

'ஏய்! இழிவான கட்டுமரமே! வரலாறு பேசுகின்றாய்? உன்னுடைய வரலாறும் மண்ணாங்கட்டியும். யாருக்குத் தேவை! நீரோடு நீராக நனைந்து தோய்ந்து சோர்ந்து மிதக்கும் நீ யெங்கே! அன்னம்போன்று நீரைக் கிழித்தபடியே படுவேகமாகப் பறக்கும் நானெங்கே உன்னைவிடவும் நான்கு மடங்கு பாரத்தைச் சுமந்துசெல்லும் ஆற்றலுடையவன் நான். என்னோடு சமதையாகக் கிடக்க முனைந்ததுமல்லாமல் எதிர்த்துமா பேசவந்தாய். தூ..! நீ கெட்ட கேட்டுக்குப் பேச்சு வேற' என காறி உமிழ்ந்தது.

அன்னப்படகின் சின்னத்தனமான பேச்சைக் கேட்டதும் கட்டுமரத்திற்கு தன்மான உணர்வு தணலாய் கொதித்தது. 'ஏய்! அறிவு கெட்ட அன்னப்படகே! புத்தியிழந்து கத்தாதே. உன்னைப்போல் சொகுசு வாழ்க்கையனுபவிக்கும் சோம்பேறியல்ல இரவல் பலத்தில் (இயந்திரம்) இறக்கை விரிப்பவனுமல்ல. இலட்சிய உழைப்போடு இரண்டறக் கலந்தவன் நான். நீ சிலைபோல எழிலோடு திகழலாம் ஆனால் மலைபோல அலைவரினும் நிலைகுலையாத என்னுடைய நெஞ்சுறுதி உனக்கில்லை. எனவே உணர்ந்துகொள்ளும் தன்மையில்லாத உன்னோடு பேசுவதிலும் அர்த்தமில்லை. காலம் பதில் சொல்லும். சந்தர்ப்பம் வரும்போது உன்னுடைய திறனும் என்னுடைய திறனும் தெரியும் அப்போது பார்ப்போம்' என்று பேச்சை நிறுத்தியது.

'சரி பார்ப்போமே' என்று அன்னப்படகும் ஏளனமாகச் சிரித்துக்கொண்டது.


சில நாட்கள்தான் சென்றிருக்கும். அன்னப்படகு, கட்டுமரமெல்லாம் கடலில் மிதக்கும்போது திடீரென மின்னல் மின்னியது. இடி இடித்தது மழையோடு புயற்காற்றும் வீச ஆரம்பித்தது. காற்றின் தாக்கத்தால் படகு கட்டுமரம் எல்லாம் தூக்கித்தூக்கி வீசப்பட்டன. அலைகள் மலை மலைபோல குதித்தெழ ஆரம்பித்தன ஈற்றில் அன்னப்படகு தாக்குப்பிடிக்காமல் இரண்டாகப் பிளந்து சிதறி நாசமடைந்தது. ஆனால் இறுக்கிப் பிணைக்கப்பட்ட கட்டுமரமோ! எந்த வளமாகப் புரட்டிய போதும் அசையாது குலையாது மிதந்த வண்ணமேயிருந்தது. தனது குறித்த கரையை புயல் ஓய்ந்தபின் போய் சேர்ந்தது. கூடவே சிதறுப்பட்ட அன்னப்படகின் துண்டுகளும் அங்கே கிடப்பதை இரக்கத்தோடு பார்த்துக்கொண்டிருந்தது.

— நிலாதமிழின்தாசன் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் அரங்கம்



பேசாத வார்த்தைக்கு
நீ எஜமான்.
பேசிய வார்த்தை
உனக்கு எஜமான்.

## விளைவுக்குப் பிந்திய உரம்

— புரிந்துணர்வு - ஐக்கியம்
— நல் எண்ணம் - கருத்துப்பரிமாற்றம்

இவைதான் இன்று உலகின் கூக்குரல்கள் இலங்கையிலும் இவைபற்றிப் பலரும் பேசுகின்றனர். மாசித் திங்கள் 4ஆம் நாள் சுதந்திர (தேசிய) தின நிகழ்வுகளிலும் மேல்வந்த கருப்பொருட்கள் கலந்திருந்தன.

அன்றையத் தினத்திலும் மக்கள் பலர் தமது சொந்த வதிவிடங்களில் சுதந்திரமாய் இருக்கமுடியாமல் காடுகளில் தஞ்சம் புகுந்தனர் என்றும் பத்துப் பேர்வரை விச ஜந்துக்கள் தீண்டி மரணித்தனர் என்றும் கிழக்குச் செய்திகள் கோடிட்டு காட்டின.

— உண்மைகள் - கொள்கைகள்
— தீர்வுகள் — திட்டங்கள்

யாரால் — யாருக்கு முன்வைக்கப்படவேண்டும் என்பதும், இதுமட்டில் இவற்றைப் பெறுவோரின் — கொடுப்போரின் நிலை என்ன என்பது பற்றியும் தான் இன்றைய ஒவ்வொரு நாட்டினதும், முழு உலகினதும் பிரச்சினையாகும்.

சிறீலங்காவில் இது ஒரு பெரும் பிரச்சினை. ஏனென்றால் பெரும்பான்மையோ, சிறுபான்மையோ, எப்பான்மையோ — எவருக்கும் என்ன நடக்கின்றது. ஏது நிகழப் போகின்றது என்பது கேள்விக்குறியே. இதனால்தான் விளங்காமை — விளக்கப்படாமை, ஆபத்து, அழிவுகள் எதிர்பாராமல் நிகழுகின்றன. பல சந்தர்ப்பங்களில் அழிவுகள் — கொலைகள் ஆக்கபூர்வமான முரண்பாட்டுச் செயற்பாடுகள் எனக் காரணம் கற்பிக்கப்பட்டாலும், உண்மை உணர்வுகளுக்கும் — உரிய விடிவுகளுக்கும் — கால இடைவெளிக்கும் அப்பாற்பட்டதாகவும் அமைந்துவிடுகின்றன.

எனவேதான்,

— மக்களின் உரிமைகளில்
— மக்களின் உடமைகளில்
— மக்களின் உயிரில்

அக்கறையுடையோர் நேரிய சிந்தனைச் செயற்பாட்டுடன் இயங்க வேண்டுமென அன்புக்குரல் கொடுப்பது

— கலையுலகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சொல் அருவி

## விளக்கங்கள் தேவை

அன்புதான் இன்ப ஊற்று
அன்புதான் ஆத்ம ராகம்
அன்புதான் பிரபஞ்சத்தின்
அடிநாதம்.
அப்பழுக்கற்ற உண்மை.
அதனை மறுக்கவில்லை;
ஆனால்,
ஆட்டின் மீதா
ஓநாயின் மீதா
அல்லது
இரண்டின் மீதோ
புரியவில்லை;
விளக்கங்கள் தேவை
''ஒரு கன்னத்தில்
அறைந்தால்
மறு கன்னத்தையும்
திருப்பிக் காட்டு''
அடித்தவனின்
அடி மனத்தில் ஈரத்தின்
சிலிர்ப்பு
ஏற்படவேண்டும்
என்பது தானே இதன்
அளவையியல் அர்த்தம்.
ஆனால்,
அறைபட்டு அறைபட்டே
இந்த கன்னங்களுக்கு
இப்போ
உணர்வு வரவழைக்கும்
ஊசி மருந்தே
உடனடித் தேவை
இதற்குத்தான் இப்போது
விளக்கங்கள் தேவை.
மூட்டைப் பூச்சிக்கும்
மதிப்பளிக்கும்
மானிலத்தில்
மனிதவுயிரை
தூசிக்கும் கீழாய்
மதிக்கிறது
தார்மீக ஜனநாயகம்.

கேள்விகள் எழுகின்றன
ஆனால்,
விளக்கங்கள்
வெகு தொலைவில்தான்
இருக்கிறது.

— ஈஸ்வர புத்திரன்
மாகோ.

## உறவுகள் மலரட்டும்!

நீதியைக் காணமல்
எம் மக்கள்...
நிம்மதியின்றித் தவிக்கின்றனர்கள்!
தாக்குதல்கள்...
தொடரும் போது...
புழுவாய்த் துடிக்கின்றனர்கள்!
மனித உயிர்களின்
நிலைகண்டு...
நாய்கள் ஓலமிட்டு அழுதிடும்!
மனிதாபிமானம்
அஞ்ஞாதவாசம் புரிந்திடும்!
கூலி ஷைத்தானுடன்
சமூக கறையான்கள்
கூட்டாளி... அமைத்திடும்!
துவேசக் கழுகுகள்
மேலெழ...
அகதிகள் 'முகாம்கள்' பெருகிடும்!
தமிழ்... முஸ்லிம்
உறவுகள்
மலர — நல்லுள்ளங்கள்
ஒன்றிணைந்து,
பிரயத்தனஞ் செய்திடும்!

ஓட்டமாவடி ஜமால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விளங்காத சனங்கள்

— குடியிருப்பூர் ஜெயரஞ்சி —

வசந்தி கழுவிய உடுப்புக்களில் இருந்து நீரைப் பிழிந்து எடுத்துக்கொண்டிருந்தாள் குனிந்துகுனிந்துநிமிரும்போது இடுப்பு கழன்றுவரும் போலிருந்தது எல்லா உடுப்புகளையும் 'றின்சோ'வில் ஊற வைத்து' வைத்து, பிழிந்து, உலர்த்தி என்று செய்துமுடிக்கவே நேரம் ஓடிவிட்டிருந்தது. நேரத்தைப் பார்த்த வசந்தி இனி சமைக்கிற வேலயப்பாக்கணும்... புள்ளைகள் பள்ளிவிட்டு வந்ததும் சாப்பாட்ட முடிக்கணும்' என்று எண்ணியவாறு குசினிக்குள் சென்றாள்.

வசந்தியின் குடும்பம் ஓர் சராசரிக் குடும்பம். கணவன் ஓர் 'போஸ்ட் மாஸ்டர்' மூன்று பிள்ளைகள். வசந்தியின் சிக்கனப் 'பட்ஜட்' அக்குடும்டத்தை சீராக ஓட்டிக்கொண்டு இருந்தது. எந்தக் கடையிலும் 'எக்கவுண்ட்' வைப்பதில்லை. கடைகளில் 'எக்கவுண்ட்'டுக்கு சாமான் எடுத்தால் மனம் தாராளமாக சாமான் வாங்கச் சொல்லும், பின் மாதமுடிவில் கடைக்கணக்கு முடிக்கவே சம்பளம் சரியாய் இருக்கும் என்பது வசந்திக்கு நன்கு புரியும். சம்பளம் எடுத்தவுடன் அரிசிக்கு இவ்வளவு, மாளிகைச் சாமானுக்கு இவ்வளவு, சீசன் டிக்கட்டுக்கு இவ்வளவு என்று சகல பொருட்களுக்கும் காசைப் பிரித்து எடுத்துக்கொள்வாள். ஏதாவது ஒன்றின் பணத்தில் கைவைத்தாலோ 'பட்ஜட்' பிழைத்துவிடும்.

அடுப்பில் குழம்பு கொதித்துக்கொண்டு இருந்தது. 'வசந்தி... வசந்தி...' யாரோ கூப்பிடுவது கேட்டது.

குழம்பை மூடிவிட்டு வசந்தி முன்னால் சென்று யார் என்று பார்த்தாள். எதிர்வீட்டு செல்லக்கா நின்றுகொண்டிருந்தாள். 'கிளி... அவசரமா... கோவிக்காம நூறுரூவா காசு தாவன்... நாளபபுறம் தந்திருவன்' என்று செல்லக்கா வசந்தியிடம் கேட்டாள். அரிசிக்கார உம்மாவுக்கு கொடுக்க வேண்டிய இருநூறு ரூபா வசந்தியிடம் இருந்தது. பின்னேரம் உம்மா வருவாள் அத்துடன் செல்லக்கா அவ்வளவு நாணயமானவளும் அல்ல.

'அக்கா என்னட்ட ஒரு சதக்காசும் இல்ல குறவிளங்காதீங்க' என்று வசந்தி செல்லக்காவிடம் சொன்னாள்.

'அப்ப ஏதாகிலும் இரிக்கிற நகையொண்ட தாவன் கிளி... பிறகு மீட்டுத்தாறன். என்று செல்லக்கா விடாபிடியாய் நின்றாள். வசந்திக்கு மிகவும் சினமாய் இருந்தது.

'என்னட்ட பெரிசா நக எதுவுமில்ல... தோடுதான் இரிக்கு... அத தர ஏலா... மன்னிச்சிகொள்ளுங்க' என்று சொல்லிவிட்டு வசந்தி வீட்டுக்குள் சென்றுவிட்டாள்.

ஊட்டுக்க வைச்சி பூட்டி பூட்டி சேருங்க... என்று சத்தமிட்டவாறு சென்றது குசினிக்குள் இருந்த வசந்திக்கு தெளிவாக கேட்டது.

'நம்மட கஷ்டம் நமக்குத்தான் தெரியும்' என்று வசந்தி மனதுக்குள் எண்ணிக்கொண்டாள்

★ ★ ★

அன்று பின்னேரம் அரிசிக்கார உம்மா வந்து காசை வாங்கிக்கொண்டு சென்றாள், பிள்ளைகள் முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்தனர் வசந்தியின் கணவர் பத்திரிகை வாசித்துக்கொண்டிருந்தார். அந்நேரத்தில் 'கேற்'றை திறந்துகொண்டு செல்லக்காவின் கணவன் வந்தான். அவன் நிறைவெறியில் காணப்பட்டான்.

'என்ன போசுமாஸ்டர் ஐயா... என்ட மனிசி உங்கட மனிசிட்ட ஒள்ளுப்பம் காசி கேட்டு வந்தவள். உங்கட மனிசி இலலண்டு போட்டாவாம்... சதக்காசில்ல என்டவவாம்... ஆனா இப்ப அரிசிக்கார உம்மாவுக்கு காசி கொடுத்திருக்காவு எங்களுக்கு தர ஏலாட்டி ஏலாண்டு சொல்லுங்க... பெட்டிக்க வெச்சிக்கொண்டு ஏன் பொய் உடுறீங்க...' என்று சத்தமிட்டுவிட்டு 'கேற்'றை அடித்து மூடிவிட்டு அவன் சென்றான்.

என்னவாம்... என்று வசந்தி கணவரிடம்கேட்டாள். அவர் அமைதியாக சொன்னார் 'நம்மட பிரச்சினை நமக்குத்தான் விளங்கும் அது மத்த சனங்களுக்கு விளங்காது... அதுகள் விளங்காம கதைக்கிதுகள். ஒரு காதாலகேட்டு மற்றக் காதால விட்டுடுவம்...'

★ ★ ★

(வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பிரச்சினைகளில் அடிபடுபவர்கள்தான். ஒருவரின் பிரச்சினை மற்றவருக்கு விளங்குவதில்லை. இதுவே பெரும் பிரச்சினை. இதனால் தான் பிரச்சினைகள் பெருக்கின்றன. ஒருவரின் பிரச்சினை மற்றவருக்கு விளங்கினால் உலகில் பிரச்சினைகளே உண்டாகாது. உலகமே இன்பமயமாகிவிடும்.

— (யாவும் கற்பனை —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## அத்தியாயம் - 14

''தாவிவரும் காதலனே
சாய்ந்து கொஞ்ச
தன் கூந்தல் விரிப்பதற்கு
மறக்காள் மங்கை!''

—ஈழவாணன்—

ஜெயந்தி, சின்னவனிடம் ஆனந்தனுக்குக் கொடுத்தனுப்பிய கடிதம் காதல் கடிதமாகத் தெரியவில்லை, கருத்தாழமுள்ள ஒரு சிறிய கவிதையாகவே அவனுக்குத் தெரிந்தது. ''அன்பின் ஆனந், தங்கள் நினைவாக மாத்திரமல்ல தங்களின் குடும்ப நினைவோடு - அதன் வளர்ச்சிக்காகப் பிராத்தனை பண்ணிக் கொண்டிருக்கிறேன் நான். இது என்னுடைய சுயநலத்திற்காக என்று நீங்கள் தவறாக எண்ணவேண்டாம். என்னுடைய சுயவிருப்பமே அதுதான், நம்மைப் போல எல்லோரும் நிறைவோடு வாழ வேண்டும் எனபதே என் அவா. உங்களைத் தினமும் என் இதயத்தில் வைத்துப் பூஷிக்கிறேன் என்றாலும் உங்கள் முகத்தை நேருக்கு நேர் நீண்ட நாட்களாகக் காணாதது எனக்கு என்னவோ போல் இருக்கிறது.

இவ்வண்ணம்
உங்கள் ஜெயந்தி

கடிதத்தை சின்னவனுக்குக் கேட்கும் படியாகவே படித்து முடித்து விட்டு அவன் முகத்தைப் பார்த்துச் சிரித்தான் ஆனந்தன்.

''ஆனந்தண்ணே, நீங்களும் சீக்கிரமாக என்னைப்போல மாப்பிளையாகிடுங்க; ஜெயந்தி பாவமண்ணே!'' என்றான் சின்னவன்.

''போடா போக்கிலி: அதுக்கெல்லாம் காலமும் நேரமும் வரட்டும்; அது இருக்கட்டும் டேசின்னவா, வீட்டில ஒரு விசயம் நடந்து போச்சி; அந்த விசயமாத்தான் நான் உன்னச் சந்திக்க வந்தனான். நீ சாப்பிட்டாச்சா!'' என்று கேட்டான் ஆனந்தன்.

''எனக்குப் பசியே இல்ல! அது கிடக்கட்டும் வீட்டில என்ன நடந்தெண்டு சொல்லுங்கவன் முதல்ல!'' என்று ஆனந்தனை அவசரப் படுத்தினான் சின்னவன்.

''இப்பிடிவா! ஆற்றங் கரையோரமாகப் போயிருந்து பேசலாம்!'' என்றபடி ஆனந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொடர்கதை

தன், சின்னவனைக் கூட்டிக் கொண்டு ஆற்றங்கரையோரமாகக் கிடந்த தென்னங்குற்றியொன்றில் போய் இருந்து கொண்டான்.

''சின்னவா, பிசறிசிலகிளாக்கா இருக்கிறானே இவன் குமார் எப்பிடியாள்!''

''சோக்கான ஆளண்ணை! எந்தநேரமும் போய் என்ன உதவி கேட்டாலும் டக்கெண்டு செய்து தருவார்!''

''சொந்த ஊர் என்ன?''

''ரவுண்தான்!''

''ரவுணெண்டால்...''

''புளியடிக்குடாவோ என்னவோவாம்!''

''அவங்கட குடும்ப நிலம எப்படி? நம்மப் போல தானே!...''

''நல்லாப்படிச்ச குடும்பத்துப் பொடியனண்ணை! தகப்பன் செத்துப்போனார். தாய்மத்திரம் தான் இருக்காவெண்டு நினைக்கிறன், குமாரோடசேத்து மூணுபேர் பிள்ளைகள், மூணுபேரும் ஆம்பிளையள், குமார்தான் கடைசிப் பையன். மூத்த அண்ணன்மார் ரெண்டுபேரும் வாத்திமார் கலியாணம் முடிச்சித்துப் பொயித்தாங்க, மூத்தவன உங்களுக்கும் நல்லாத்தெரியும் ஒரு முறை முனிசிப்பால்டி எலக்ஷன் கேட்டு வெண்டவர்!''

''அது சரி உனக்கு இதெல்லாம் எப்பிடிராப்பா தெரியும் நான் உன்ன சின்னவனென்டு தான் இவ்வளவு நாளும் நினச்சிருக்கன்! ஆனா நீ ஆள் பெரியாள்!''

''என்னப்பத்தி உங்களுக்கு மட்டுமில்ல என்ர மாமனுக்கே போகப்போகத்தான் தெரியும்! அதுசரி இதெல்லாம் நீங்க எதுக்காகக் கேக்கிறீங்க?''

இப்படி சின்னவன் கேட்டதும், ஆனந்தன் தொண்டையைச் செருமிக் கொண்டு, மாணிக்கம் அவனிடம் சொன்ன விசயத்தையெல்லாம் சின்னவனுக்குச் சொன்னான்.

''அண்ணே ஆளவிட்டிராதீங்க! நமக்குச் சகல விதத்திலும் ஒத்துப் போகக் கூடிய நல்ல பையன் குமார், நாளைக்கே ஜாம் ஜாமெண்டு கலியாணத்தைப் பண்ணி வெச்சிருங்க''

''கலியாணத்த முடிச்சி வைக்கிற இருக்கட்டும் முதல்ல பையனுக்கு கலியாணம் முடிக்க பூரண சம்மதமா என்டுறத அறிய வேணுமே! உன்னைப்போல என்னைப்போல இந்த நாளையப் பொடியனுகளெல்லாம் இருப்பானுகளென்டு நாம எதிர்பார்க்க முடியுமா! அதுதான் எனக்கு பெரிய கவலையாயிருக்கு!'' நீங்களும் உங்கட கவலையும் உட்டுத்தள்ளுங் கண்ணே! நான் நாளைக்கே ஆளைப்போய்ச் சந்திச்சி ஒரு நல்ல முடிவோட வாறன்!'' என்றபடி எழுந்தான் சின்னவன்.

''டேடே நீ போய் விசயத்தக் கெடுத்துப்போடாத!'' என்று சொல்லிக் கொண்டே அனந்தனும் எழுந்தான்.

''அண்ணே உங்கட பொறுப்பு எனக்குத் தெரியும் இந்தக் கலியாணத்த நிறைவேற்றி வைக்கிறதில எனக்கும் கொஞ்சப் பொறுப் பத்தாங்க! பிறகு இருந்து பாருங்கவன் என்ர கெட்டித்தனத்த!''

இப்படிச் சொல்லிக் கொண்டே ஆனந்தனின் பதிலை எதிர்பாராமல் அங்கிருந்து அகன்றான் சின்னவன்.

அவன் பேச்சையும், துணிவையும் பார்க்கப்பார்க்க ஆனந்தனுக்கு சின்னவனின் மேலிருந்த பாசமும், நம்பிக்கையும் மேலும் அதிகமானது.

ஒரு குடும்பத்தில் தொடர்ச்சியாகத் துன்பங்களே வந்து கொண்டிருக்காது. வண்டிச் சக்கர வாழ்க்கையில் இன்பங்களும் வரத்தான் செய்யும் ஏதோ என் தங்கை சித்திராவின் திருமணம் நல்லபடியாக நடந்து முடிந்தால் அதுவே போதும்! என்று தனக்குள்ளேயே எண்ணியபடி நடந்த ஆனந்தனை ''தம்பி ஆனந்தன், கொஞ்சம் நில்லு!'' என்ற கரகரத்த குரல் சத்தம் பின்னாலிருந்து வந்து நிறுத்தியது. திரும்பிப்பார்த்தான், அங்கே வீரகத்தி, சைக்கிளை விட்டு இறங்கிக் கொண்டிருந்தார். — தொடரும் —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருமறையைத் தெரிந்துகொள்வோம்

றெக்ஸ்

கேள்வி :

வேதாகமத்தின்படி உலகப் படைப்பை ஆரம்பிக்கும்போது இறைவன் ஆரம்பத்தில் வானதூதர்களைப் படைத்ததாக இல்லை. எமக்கு மறைக்கல்வி கற்பித்த ஆசிரியர்கள் இறைவன் வானதூதர்களையே முதலில் படைத்தார், அவர்களில் காய்மகாரம் அடைந்த சில வானதூதர்களே சாத்தானுக மாறினுர்கள் என்று கூறினுர்கள் வேதாகமத்தில் குறிப்பிடப்படாத இது உண்மையாகுமா? அப்படி இல்லையெனில் அனைத்தையும் படைத்த இறைவனை அறியாமல் சாத்தான் எங்கிருந்து வந்தான்? ஆதியாகமம 3/1 இல் இறைவனின் படைப்பில் பாம்பு தந்திரமுள்ளது என்றும் இருக்கிறது. பதில் தாருங்கள்.

கேட்டவர் :

அல்போன்சா பிரான்சிஸ்
கொக்கட்டிச்சோலை.

பதில் :

சாத்தான் வானத்திலிருந்து மின்னல்போல விழக் கண்டேன். என்னும் வேதாகமத் திருக்காட்சியாளரின் கூற்றுக்கு மத்தியகால இறையியலாளர்கள் கொடுத்த கற்பனை விளக்கமே அத்தகையதொரு இறையியல் விமர்சனத்துக்குக் காரணம் ஆகும். ஆம் உண்மையில் வேதாகமத்தில் இறைவன் வானதூதர்களை உண்டாக்கியதற்கும், அவர்களுட் சிலர் பேய்களாக மாறியதற்கும் எந்த ஆதாரமும் இல்லை.

உலகப் படைப்பின் விளக்கம்கூட, உலகமும் அதற்கு உள்ளே / வெளியே இருப்பவை அனைத்தும் இறைவனுல் உண்டாக்கப்பட்டவை என்னும் தத்துவக் கூற்றை விளக்கக் கையாளப்பட்ட பண்டைய விளக்கமேயன்றி அதை நேரிற்கண்ட சாட்சியின் நேரடி விமர்சனம் அல்ல. தொன்றுதொட்டே அறிவுள்ள மனிதன் அண்டம், கோள்கள், உலகம், மனிதன் என்பன பற்றி அவற்றின் இயல்பென்ன அவற்றின் தொடக்கம் என்ன என்னும் அடிப்படைக் கேள்விகளைக் கேட்டு வந்துள்ளான். அக்கேள்விகளுக்கு விடையளிக்கும் முகமாக மதங்களும், தத்துவங்களும் பலப்பல விடைகளை (விளக்கங்களை) அளித்துள்ளன. அவையனைத்தும் மனிதனின் (ஞானிகளின்) புத்தியிலிருந்தும் ஆய்விலிருந்தும் பிறந்த விளக்கங்களே என்பதை மனிதன் பின்னணியில் வைத்துக்கொள்ளல் வேண்டும். இக்கர்ண பரம்பரை விளக்கங்கள் தொன்றுதொட்டே வாழையடி வாழையாகத், தலைமுறை தலைமுறையாக, வாய்வழி மரபு மூலம் தொடர்ந்துவந்து பின்னர் எழுத்திற் பொறிக்கப்பட்டன.

வேதாகமத்தில் கூறப்படும் உலகப் படைப்பு பற்றிய விளக்கங்களுக்குப், பண்டைய பபிலோனிய உலக சிருஷ்டி பற்றிய கதைகளுக்கும் நிறைந்த தொடர்பு உண்டு என்பதை வேதாகம ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வாய்வழி மரபுகளாக உலவிவந்த பண்டைய யூத மறை விளக்கங்களும் ஆன்மீகப் படிப்பினைகளும் காவியங்களும்; கி. மு. 5ம் நூற்றுண்டில் பபிலோனில் அடிமைகளாயிருந்த யூத இறைவாக்குக் குருகுலத்தோரால் எழுத்திற் பொறிக்கப்பட்டதன்மூலம் பழைய ஏற்பாட்டின் முதல் 5 ஆகமங்கள் உருவாயின என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை எனவே தான் முன்கூறப்பட்ட அடிப்படைக் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் பபிலோனிய, யூத மரபு விளக்கங்களைத் தேவையான - பொருத்தமான அளவில் உபயோகித்து அவ்வேதாகம ஆசிரியர்கள் நாம் ஆதியாகமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திற் காணும் உலகப் படைப்பு பற்றிய கதை யைப் புனைந்தனர். ஆறு நாட்படைப்பு கூட அன்றைய யூதச் சமூகத்தின் மறைக் கோட் பாடுகளை (ஏழாம் நாளான ஓய்வுநாள்) வலி யுறுத்துவதற்காகத்தான்: அதாவது சர்வ வல் லமை படைத்த இறைவனே ஓய்வு நாளையும் அனுசரித்தார் என்று அதன் மேன்மையையும் அவசியத்தையும் வலியுறுத்துவதற்காகவே.

சேனைகளின் கர்த்தர் வாழி என்று வேதா கமத் திருப்பாடல்களில் இறைவன் மகிமைப் படுத்தப்படுவதை அறிவீர்கள். இறைவனை ஒரு அரசனாகவும், மனித அரசர்களுக்கு இருப்ப தைப் போலவே சேனைகள், படைகள் உண் டெனவும் பண்டைய மதங்கள் அனைத்துமே கருதி வந்தன. யூத மதமும் இதற்கு விதிவிலக் கல்ல. வானதூதர்கள் என்பவர்கள் 'யாவே' இறைவனின் வீரர்கள், தூதர்கள், சேவகர்கள் என்பதை, மிக்கேல், கபிரியேல், ரபாயேல் போன்ற தூதர்கள் செயல்படும் விதத்தையும்; ஏதேன் தோட்டத்து வாயிலில் நிறுத்தப்படும் தூதர்கள், எகிப்திய தலைச்சன் பிள்ளைகளைக் கொல்லும் தூதன், செயல்படும் முறைகளையும் உன்னித்து நோக்கின் தெளிவாகும்.

உலகப் படைப்பின் விபரத்தில் வான தூதர்களின் படைப்பு பற்றி கூறவேண்டிய அவசியம் வேதாகம ஆசிரியருக்கு எழவில்லை. ஏனென்றால் சேனைகளுடைய இறைவன்தான் உலகையும் அதிலுள்ள யாவையும் உண்டாக் கினார். என்பதே அவரது வாதம். அக்காலத் தில் (2500 ஆண்டுகளுக்கு முன்) சூரியன், சந்திரன், தாரகைகள் அனைத்தும் உலகத்துக் குள்ளேயே அடங்கியவை எனக் கருதப்பட் டன. ஓர் அந்தத்தில் வானத்தையும் மறு அந்தத்தில் பூமியையும் அதற்கடியிலுள்ள நீர், நெருப்பு முதலியவற்றை உள்ளடக்கியதுதான் உலகம் என்பதே பண்டைய யூதக் கொள்கை. வானவிரிவு ஒரு கூடாரம் போன்றது என்றும் அதற்கு அப்பால், இறைவன் உறையும் விண் ணகம் உள்ளது எனவும் அவர்கள் கருதினர். அந்தக் கூடாரத்துக்கு உள்ளேயே சூரிய, சந் திர, தாரகைகள் உள்ளன என்றும் கருதினர். நவீன மனிதன் இத்தகைய நம்பிக்கைகளை இன்று ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் பண்டைய மனிதர்கள் (விஞ்ஞான யுகத்துக்கு முற்பட்ட மனிதர்கள்) இப்படித்தான் நம்பினர் என் பதே உண்மை.

## யூதர்களும் யூதாசும்

இயேசுக் கிறிஸ்துவின் சாவுக்கு யூதாசும், யூதர்களும் காரணமாயிருந் தனர். அவரது இரத்தப்பழி தம்மீதும், தம் சந்ததி மீதும் விழட்டும் என ஆணவத்தோடு கூக்குரலிட்டனர் யூதர். யூதாஸ் மாசற்ற இரத்தத்தைக் காட்டிக்கொடுத்தேனே என அவநம் பிக்கையோடு ஓலமிட்டான் அவநம் பிக்கை கொண்ட யூதாஸ் தனியாகத் தற்கொலை புரிந்துகொண்டான். ஆண வம் கொண்ட யூதரின் இனமே அழிந் தது; அழிந்துகொண்டிருக்கிறது. அவர் களுக்கென ஓர் அமைதியான வீடு கிடையாது, நாடும் கிடையாது.

அவநம்பிக்கை சிலரை அழிக்கி றது. ஆணவமோ எல்லாரையும் ஏன் இனத்தையுமே அழித்துவிடுகிறது இவை இரண்டும் இல்லை என்றால் நீயும் நானும் யூதாசும் யூதர்களும் அல்ல.

— சேவியர் ஜோதி

பபிலோனிய, எகிப்திய மதங்கள் கடவு ளர்களிடையே நல்லோரும் தீயோரும் உள ரென நம்பினர். மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகளும் வரங்களும் நல்ல கடவுளாலும்; சாபங்களும் கேடுகளும் ஆபத்துகளும் தீய கட வுளாலும் வருகின்றதெனக் கருதினர். ஆனால் ஒரே கடவுட் கொள்கையில் நம்பிக்கை கொண்ட யூதர்கள் நன்மையின் ஊற்றான இறைவன் நன்மைக்குமட்டுமே காரணமானவர் என்றும் சிலவேளையில் அவர்தரும் தீமைகள் மனிதனின் பாவங்களுக்குத் தண்டனையும் மனத்திருப்பத்திற்குத் தூண்டுகோலும் ஆனவை என விசுவசித்தனர்.

அதேவேளையில் தீமைக்குக் காரணமாக ஒரு சக்தி அதுவும் இறைவனுக்கு ஈடாக அல்ல. மனிதனுக்கு மேலானாலும் இறைவ னுக்கு கீழாக உள்ள சக்திகள் என்றும் அவற் றுள் எகிப்திய, பபிலோனிய மதத்தவர்களின் தெய்வங்கள் அடங்கும் என்றும் கருதினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இத்தகைய சக்திகள் ஆவிகளாக உருவகப்படுத்தப்பட்டது. புதிய ஏற்பாட்டின் காலத்திலே அன்றிப் பழைய ஏற்பாட்டின் காலத்தில் அல்ல.

சாத்தான் என்பது சோதனை செய்பவன் எனப் பொருள்படும் ஒரு தொழிலாகு பெயர். அதன் இயல்பு தீமையைக் குறிக்கும். தீமை என்பது நன்மையின் இல்லாமை ஆகும். உதாரணமாக ஒளியின்மையைத்தான் இருள் எனக் கூறுவோமேயன்றி இருளின்மை ஒளியல்ல. அதாவது இருள் என்பது ஓர் இருப்பு அல்ல - ஒளி ஓர் இருப்பு அதன் இல்லாமைதான் இருள். அதுபோலவே தீமை என்பதும் நன்மையின் இல்லாமையிலிருந்து வெளிவரும் ஒரு நிலையேயன்றித் தானாக இருக்கும் ஒரு சக்தியல்ல. ஒளி குறையக்குறைய இருள் கூடுவதுபோல (இருள் கூடக்கூட ஒளி குறைவதில்லை); நன்மை குறையக் குறையத்தான் தீமை கூடும். நன்மையைவிடத் தீமை கவர்ச்சியானது, மனிதப் புலன்களையும் மனத்தையும் சுண்டி இழுக்கக்கூடியது. அத்தீமையின் மொத்தத்திற்குக் கொடுக்கப்பட்ட ஆளுமையுருவமே சாத்தான் அல்லது பேய் எனப்படும் நாமமும் உருவமும் என்பது என் தாழ்மையான கருத்து. (இதற்கு மேலும் விளக்கப்போனால் இடம் போதாது என்பதால் சுருக்கிக்கொள்கிறேன்).

பாம்பு கூடப் பண்டைய பபிலோனிய, கானானிய மதங்களில் ஒரு தெய்வமாக வழிபடப்பட்டது; மந்திர தந்திரங்களோடு சம்பந்தப்பட்டது; அம்மதங்களின் புராணங்களிலே இறப்பில்லா வாழ்வைத்தரும் சஞ்சீவ விருட்சத்தை காவல் செய்யும் தெய்வம் எனக் கருதப்பட்டது. இப்பபிலோனியப் புராணக் கதையமைப்பை வைத்தே அதன் பொய்மையை எண்பிக்கவும்: இறைவனின் ஆணைக்கமைய வாழ்ந்தால் மட்டுமே நித்திய வாழ்வு கிட்டும் — ஜீவ விருட்சத்தின் கனியை உண்பதனால் அல்ல, என்றும் மேன்மையான படிப்பினையைப் புகட்டுவதற்குமே இவ் உருவங்களையும் பொருட்களையும் வேதாகம ஆசிரியர் உபயோகப்படுத்தினர்.

ஆகமொத்தமாக, மனுக்குலம் தொன்று தொட்டே கடவுள் யார்? அவர் எப்படியிருப்பார்? இந்த உலகம் எப்படி வந்தது. தீமை எப்படித் தோன்றியது? என்னும் அடிப்படைக் கேள்விகளைக் கேட்கின்றது. இக்கேள்விகளுக்கு தத்துவங்களும் பதில் கூற முனைந்துள்ளனவேயன்றி முற்றான / முழுதான பதிலைத் தரவில்லை. அப்படியிருக்க எனது பிதற்றலை உங்கள் கேள்விக்குரிய முழுமையான பதில் என நினைக்கவும் துணியவில்லை. ஆக நான் எழுதியுள்ளதெல்லாம், மனுக்குலத்தின் கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட ஒரு விடையில் — வேதாகம விளக்கத்தின் — (அது விடைகளுலெல்லாம் மிகச் சிறந்த விடையாகவும் இருக்கலாம்), என் சிறிய புத்திக்கு எட்டிய வியாக்கியானமேயன்றி வேறல்ல.

# வாயாடி வண்டுமணி



## தவக்காலம்... தவக்காலம்... தவக்காலம்...

இந்தமுற இந்தத் தவக்காலம் எனக்கு ரொம்ப அர்த்தமுள்ளதா தெரியுதுங்க. தவக்காலம் யேசுவோட பாடுகள — துன்பங்கள மரணத்தை நமக்கு நினைப்பூட்ற காலந்தானுங்களே அந்தவகையில நம்ம வாழ்க்கையே இன்னைக்கு தவம் தானுங்க! ஆனா அதுக்கெல்லாம் கடைசியில உயிர்ப்பு, விடுதலை அப்படீன்னு ஒண்ணு இருக்குதுங்களே! அதை முழுசா நம்பினா மட்டுந்தாங்க இந்த துன்பத்துக்கெல்லாம் அர்த்தமுண்டு. அந்த நம்பிக்கை மட்டும் இல்லேன்னா அப்புறம் தவம் என்ன நோன்பென்ன விட்டுத்தள்ளுங்க சார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சர்வதேச கத்தோலிக்க பத்திரிகை அமையத்தின்

# 14வது மகாநாடு பற்றிய அனுபவங்கள் (தொடர்) 3

# 14th Congress of (UCIP)

## கலையுலகன் எஸ். லோகநாதன்

**1986** ஒக்ரோபர் 21ஆம் நாள், முற்பகல் தேநீர் இடைவேளைக்குப்பின் 11.30க்கு மாகாநாட்டு முதற்கட்ட நிகழ்ச்சித் தொடர் ஆரம்பமானது.

UCIPயின் தலைவர் — கலாநிதி கன்ஸ் சஸ்மன் 14வது மகாநாட்டின் கருப்பொருளை அறிமுகம் செய்தார். UCIP ஒவ்வொரு மகாநாட்டிலும் ஒவ்வொரு ஆய்வுப் பொருளை முன்வைக்கின்றது என்பதை நாம் முன்னமே குறிப்பிட்டிருந்தோம். இந்த மகாநாடு "தொடர்பு - கலாச்சாரம் - சமயம்" (Communication - Culture - Religion) எனும் எண்ணக்கருக்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

எண்ணக்கரு பற்றித் தலைவர் எடுத்துரைத்ததும் அதிமேற்றிராணியார் ஜோண் பி. பொலி மாவட்ட சமய முதல்வர்களுக்கான ஆரவார மதக்கொள்கை (Pontifical Commission) பற்றி மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கம் கொடுத்தார். திருச்சபை எவ்வளவு தூரம் மானிட வாழ்வில் இக்கால நவீன தொடர்புச் சாதனங்கள் மத்தியில் கூடிய அக்கறை கொண்டு இயங்குகின்றது என்பதனையும் விரிவாக வெளிப்படுத்தினர். இந்த இடத்தில் அதிமேற்றிராணியார் ஜோண் பி. பொலி பற்றி சில குறிப்புக்களைத் தர விழைகின்றேன்.

நெடிய உருவம், நிமிர்ந்த நெஞ்சு, ஒளிமயமான பார்வை, அனைவரையும் ஈர்க்கும் புன்சிரிப்பு இவை எல்லாம் கொண்ட வத்திக்கான் புறுக்களில் ஒன்றுதான் அதிமேற்றிராணியார். ஐம்பது ஆண்டுகளைக் கடந்த ஆயரானாலும் நிகழ்ச்சித்தொடர் அனைத்திலும் களைக்காமல் — முன்வரிசையில் அமர்ந்து கருத்துக்களை சீர்தூக்கி — பிரச்சினைகள் எழும்போது அவற்றிற்கு தகுந்த தீர்வுகளையும் — ஆற்றுப்படுத்தலையும் வழங்கும் திறன் உள்ள ஒரு ஆயர்தான் ஜோண் பி. பொலி அவர்கள்.

மதிய உணவுக்கு அனைத்துப்பேரும் மகாநாட்டு மண்டபத்தைவிட்டு அகன்றனர்.

மீண்டும் பிற்பகல் மகாநாட்டு நிகழ்ச்சித் தொடர் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமானது. பிற்பகல் நிகழ்ச்சிகள் இந்திய மயமாய் அமைந்திருந்தன. இந்திய சமய — கலாச்சார — பண்பாட்டுத் தொடர்புகள் பற்றிய ஆய்வுரைகள் இடம்பிடித்திருந்தன.

இந்தியத் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. சிறி V. N. ஹாட்சில் அவர்கள் "இந்திய சமய — கலாச்சார பண்பாட்டுத் தொடர்புகள்" பற்றி மேல்வாரியான விளிம்புகளையும், ஆய்வுரைகள் வழங்கும் பேச்சாளர்களையும் அறிமுகப்படுத்தினர்.

டெல்கி பல்கலைக்கழக சமூகவியல் துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் கலாநிதி வீணு தாஸ் அவர்களும், 'தீபிகா' (Deepika) சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் கலாநிதி விக்ரர் நரிவெலி அவர்களும், பம்பாய் கலைக்கல்லூரியைச் சேர்ந்த அருட்திரு. பிரான்சிஸ் பாவோஜா அவர்களும் இந்தியக் கலாச்சாரத் தொடர்புகள் — சமயங்கள் பற்றி விரிவான ஆய்வறிக்கைகளை முன்வைத்தனர்.

உலக நாடுகளில் அதிக கலாச்சாரம் — பண்பாடு, சமயங்கள் — மரபுகள் — பழக்க வழக்கங்கள் உள்ள ஒரு நாடு இந்தியா என்பது அன்னோர்களின் சாரமாய் அமைந்திருந்தது. இந்தியாவின் முழு மாநிலங்களையும் (States)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பார்த்து அனுபவிக்கும் எந்த ஒரு அயல்நாட்டவரும் இந்த உண்மையை விளங்கிக்கொள்ள முடியும் என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

மேல்வந்த ஆய்வுரைகளும் - அது தொடர்பான கருத்துப்பரிமாறல்களும் முடிவடைய மாலை 5.00 மணியாகிவிட்டது. 1ஆம் நாள் மகாநாட்டு நிகழ்ச்சிகள் முடிவடைந்துள்ளதை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அறிவித்ததைத் தொடர்ந்து, ஏற்கனவே நிகழ்ச்சி நிரலில் கொடுக்கப்பட்டதன்படி. புதுடெல்கிப் பேராலயம் நோக்கி எல்லோரும் ஒழுங்குசெய்யப்பட்ட பேருந்துகளில் விரைந்தோம். இந்தியப் பண்பாட்டுப் பூசையில் கலந்துகொள்வதற்காக.

புதுடெல்கியிலுள்ள அதிமேற்றிராணியார் ஆஞ்சலோ ஐ. பெர்னாண்டிஸ் அவர்கள் தலைமைதாங்க 75க்கும் மேற்பட்ட குருக்கள் ஒன்றிணைய மலையாளப் பாடலுடன் கரக நடனம் முதலில் இடம்பெற பண்பாட்டுப் பூசை உதயம் பெற்றது. 10 பெண்கள் வெண் சாரி உடுத்து தலையில் முட்டிகள் வைத்து நடனம் ஆடி பூசைக்கு மக்களை அழைக்கும் முறையில் பண்பாட்டு பூசையின் ஆரம்பம் அமைந்திருந்தது. முழுக்க பண்பாட்டுப் பூசை இந்தியில் இடம்பெற்றது.

ஒரு பெரிய குறை என்னவெனில், பூசையை நடாத்த ஒன்றிணைந்த குருக்கள் மாத்திரமே தரையில் அமர்ந்திருக்க ஏனையோர் ஆசனங்களில் அமர்ந்திருந்தது பெரு குறையாகத் தென்பட்டது. இறை ஒன்றிப்புக்கு அது இடஞ்சலாகவும் அமைந்திருந்தது.

திருப்பலி முடிந்து இந்தியத் தலைநகர கத்தோலிக்கச் சங்கத்தினரால் ஒழுங்குசெய்யப்பட்ட மாலை தேநீர் விருந்துக்கு அனைத்துப் பிரதிநிதிகளும் விரைந்தார்கள். மாலை 7மணியளவில் பேராலய — கலை மண்டபத்தில் பரத நாட்டிய நிகழ்ச்சி ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. பரதநாட்டியத்தில் கலந்துகொண்டவர் அருட்திரு. பிரான்சிஸ் பாவோஜா அவர்களாகும்.

**பரதநாட்டியம் —**
**அருட்திரு. பிரான்சிஸ் பாவோஜா**

அருட்திரு. பிரான்சிஸ் பாவோஜா 35 வயது மதிக்கத்தக்க ஓர் இளம் குரு (SVD) இவர் பம்பாயிலுள்ள ஒரு கலைக் கல்லூரியின் (Gyan Ashram - Institute of Performing Arts) இயக்குனராகப் பணிபுரிகின்றார்.

இறைவன் தந்த உடல் — அதன் உறுப்புக்களைக் கொண்டு எவ்வளவு செய்திகளை மக்களுக்கு (நாட்டிய முறையில்) வழங்கலாம் எனும் உயிர்த்துடிப்புடன் இயங்கி வருகின்றார்.

மேடையிலே அவர் பரத நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தபோது அத்தனை பேரையும் ஆட்கொண்டுவிட்டார். குறிப்பாக ஐரோப்பிய, அமெரிக்கப் பிரதிநிதிகளை ஈர்த்துக்கொண்டார்.

அவரின் கண், இமை, வாய் அத்தனையும் எவ்வளவு ஆயிரம் செய்திகளைக் கூறின என்பதை எளிதில் வார்த்தையில் வடிக்கமுடியாது. உலகை இறைவன் படைத்தது தொடங்கி ஏவாளை பசாசு ஏமாற்றினது. அதனைத் தொடர்ந்து இறைவன் தண்டித்தது வரை ஒரு நாட்டிய நிகழ்ச்சியையும்,

மரியாளுக்கு கபிரியேல் தூதன் மங்கள வார்த்தை கூறியதை இன்னுமொரு பரத நாட்டிய நிகழ்ச்சியிலும்,

இறை யேசு பாரச்சிலுவை சுமந்து கல்வாரி சென்று உயிர்விட்டு — உயிர்த்தெழுந்ததை இறுதி நாட்டியத்திலும் செய்துகாட்டினார். தன்னந்தனியாக அனைத்துப் பாத்திரங்களுக்கும் உயிர் ஊட்டி — உணர்ச்சிகளை அவ்வாறே கொட்டி, பின்னணி இசை பாடல்களுக்கு ஏற்ப அவர் பரதநாட்டியம் ஆடியது பெரிதும் பாராட்டுக்குரியதே. பின்னணிப் பாடல்கள் இந்தியிலும், மலையாளத்திலும் பாடப்பட்டன. அந்த உயிர் ஓவியம் முடிவடைந்ததும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கள் தங்குமிடங்களுக்குச் சென்றனர்.

(தொடருவோம்)

உண்மையாக மனிதன் மனம் மாறினால் அவன் மனம் மாரியாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## எனக்கென எதுவுமில்லை !

எனக்கென எதுவுமில்லை — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர
— இவன்
தனக்கொரு நிலைவிலனாய் — மிகத்
தாழ்வுற வாழ்வதைத் தவிர்க்கிலனே
— எனச்
சினக்கவும் இயல்வதில்லை — ஒரு
சிரிப்பினில் இகழவும் முடிவதில்லை — பிற
மனக்குறை எதுவுமில்லை — தமிழ்
மானத்தை மீட்கின்ற நாள்வரையில்
— இங்கு
எனக்கென எதுவுமில்லை — இந்த
இனங்கெட்ட தமிழனின் நிலைதவிர

T. தங்கேஸ்வரி
அன்புவழிபுரம்.

## இரண்டும் ஒன்றுதானா ?

அரசியல்வாதி என்றோ
கொடுத்த
வாக்குறுதியை நினைத்து
நம்பியிருக்கும்
மக்களைப் போல்
என்றோ நீ
பார்த்த அந்தப்
பார்வையை நினைத்துக்
காத்திருக்கின்றேனே...
இரண்டும் ஒன்றுதானா...?

மிருணாளினி தவராஜா
மட்டக்களப்பு.

# உருக்குலைந்த உருவம்

ஓவியமொன்று
உருக்குலைந்து
காவியமானதங்கே - எண்ணில்
கண்ணீர் பெருகுதங்கே

பட்ட மரங்கள்
திட்டம் போட்டு
பசுமையை அழித்துவிட்டார் — பாரில்
கொடுமையை விதைத்துவிட்டார்

அந்தக் கரங்கள்
அள்ளிக் கொடுத்தது
ஆயிரமாயிரமாம் — இன்று
ஆணிகள் பிடித்தனவாம்

பேசிய வாயால்
பிழைத்தது எத்தனை
ஆசிகள் ஆர்க்கில்லை — அந்தோ !
ஆகினவே ஊமை.

பரிவுடன் பார்த்த
பார்வைகள் எல்லாம்
பஞ்சடைந்தனவோ - இனி — நாம்
பார்ப்பது யாரை இனி.

அகிலம் தனக்காய்
அடித்த இதயம்
அடங்கியதே ஐயா — நெஞ்சில்
அமைதி அழிந்ததையா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சுமை சுமந்து சோர்ந்திருப்போரே

— செல்வன் M. ஜோசப் சால்ஸ் —
கொழும்பு - 13.

ஒவ்வொரு மனிதனும் இரண்டு விதமான சுமைகளை சுமக்க முடியாமல் சுமந்து செல்கின்ருன்.

1. தனது கடந்த காலத்தைப்பற்றிய கவலை.

தனது கடந்த காலத்தில் எவ்வாறு வாழ்ந்துவந்தேன். எப்படியெல்லாம் சந்தோஷமாக வாழ்ந்திருந்தேன். கஷ்டமோ, துன்பமோ என்ன என்று தெரியாமல் வாழ்ந்திருந்தேன். குறையென்று எதுவுமே இல்லாமல் வாழ்ந்து வந்தேன். ஆனுல் இன்று...

வேறு சிலர் தனது கடந்தகாலத்தில் தாங்கள் செய்த பாவங்களை நினைத்து நினைத்து வேதனைப்பட்டுக்கொண்டேயிருப்பார்கள்.

இன்னும் சிலர் தங்களது கடந்தகால காதல் வாழ்க்கை, பாடசாலை வாழ்க்கை, இன்பமான, துன்பமான, வேதனையான சம்பவங்களை நினைத்து நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட மனிதர்களை நாம் இன்று காண்கின்ருேம். இவர்களைப் பார்த்து இறைமகன் இயேசுக்கிறிஸ்து கேட்கும் கேள்வி இதுதான். கடந்த காலத்தைப் பற்றி கவலைப்படுவதால் உனக்கு என்ன பயன்? அதை மீண்டும் வா, வா என்ருல் வருமா? அது கடந்தவை, கடவுளாகிய எனக்கே சொந்தமானது. எனவே தனது கடந்தகாலத்தைப்பற்றி கவலைப்படுவதில் எந்த மனிதனும் அதை மீண்டும் பெறமுடியாது.

> ஒவ்வொரு நிமிடமும் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலையும், நேரமும் கடவுளிடமிருந்து வருவதாக நினை. உன் வாழ்வில் சலிப்பு ஏற்படாது.

2. மனிதன் தனது எதிர்காலத்தைப் பற்றிய பயத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ருன். எதிர்கால பயம் ஒவ்வொரு மனிதனையும் ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கின்றது இதற்காகவே பணத்தை சேகரிக்கின்ருன் இன்று உண்ணுவதற்கு உணவில்லை ஆனுல் எதிர்காலத்திற்காக சேமித்து வைக்கின்ருன். ஒரு தாயானவள் விளையாடிக் கொண்டிருக்கும் தனது மூன்று வயது பெண் குழந்தையைப்பார்த்து கவலைப்படுகின்ருள். இன்னும் பதினைந்து வருடத்திற்குப்பின் இவளுக்கு சீதனம் கொடுக்க என்னிடம் ஒன்றும் இல்லையே என்று. இப்படித்தான் ஒவ்வொரு மனிதனும் எதிர்காலத்தைப் பற்றி பயப்படுகின்ருன். இப்படிப்பட்ட மனிதர்களைப் பார்த்து இறைமகன் இயேசுகிறிஸ்து கேட்கும் கேள்வி இதுதான். நீ எதிர்காலத்தைப் பற்றி பயப்படுவதில் அர்த்தம் என்ன? அடுத்த நிமிடம் உனக்கு என்ன நிகழப்போகிறதென்று உனக்கே தெரியாதிருக்க நாளை நடப்பதைப் பற்றி அல்லது 15 வருடத்திற்குப்பின் நடக்கப்போவதைப்பற்றி பயப்படுகின்ருயே நீ விரும்பினுலும் இறைவனின் சித்தத்திற்கு மாருக ஒரு வினுடியேனும் உன்னுல் இவ்வுலகில் கூடுதலாக வாழமுடியாது, எதிர்காலமானது கடந்த காலத்தைப்போல இறைவனுக்கு சொந்தமானது.

இயேசு கூறுகின்ருர் எனவே மனிதர்களே உங்களது இரண்டு சுமைகளான கடந்தகால கவலையையும் எதிர்கால பயத்தையும் என்னிடம் விட்டுவிடுங்கள். உங்கள் சுமைகளை என் தோள்களில் நான் சுமப்பேன். இந்தக் கணமே (நிமிடம்) உனக்கு சொந்தமான நேரமாகும். எனவே நீங்கள் பாவவாழ்வை விட்டு என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களை இளைப்பாற்றுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வெள்ளிவிழா - யாழ்நகரில்

திருமலை - மட்டுநகர் ஆயர் அதிமேன்மை தங்கிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் மறை மாவட்ட முதல்வர் அருட்திரு. சேவியர் குரூஸ், யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. M. E. பயஸ், அருட்திரு. J. E. பஸ்தியாம்பிள்ளை அருட்திரு. N. சவரிமுத்து ஆகியோரின் குருத்துவ வெள்ளி விழாவின்போது யாழ். ஆயர் இல்லச் சிற்றாலயத்தில் 31-1-87 இல் யாழ். கொழும்புத்துறை குருத்துவக் கலாசாலை அதிபர் அருட்திரு. கலாநிதி S. J. இம்மானுவேல் ஆற்றிய ஆங்கில உரையின் சாராம்சம் பின்வருமாறு :

விழா நாயகர்களே !
எனது சக குருக்களே !!

ஒரு தேசத்தின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றில் 25 வருடம் என்பது மிகச் சொற்ப காலமே! ஆயினும், ஒரு குருவின் வாழ்க்கையில் அது பிரதான பாகத்தைக் கொண்டுள்ளதென்பதாலும், இறைவனின் சேவையில் செலவுசெய்த காலமாய் இருப்பதாலும், நாம் அதையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுவதுடன், வெள்ளி விழா நாயகர்களையும் ''பல்லாண்டு வாழ்க'' என வாழ்த்துகின்றோம்.

மேலும், குருத்துவ யூபிலி விழா நாயகர்கள் கிறிஸ்துவின் குருத்துவத்தில் திடனாய் நிலைகொண்டு, அதன் காரணமாய் இறை மக்களுக்கு அருட்சாதனங்கள் மூலமாகவும், தத்தமது தியாக வாழ்க்கை மூலமாகவும், எத்தனையோ நன்மைகள் புரியும் வாய்ப்பினை இறைவன் இவர்களுக்குக் கொடுத்துத் தமது திருச்சபையில் பல்வேறு பணிகள் ஆற்றவும் சித்தமாகியுள்ளார். இவற்றையெல்லாம் எண்ணும்போது, குருக்களாகிய எமக்கும் ஏனைய இறை மக்களுக்கும் இவ்வைபவம் ஓர் மேல்வரிச் சட்டமாய் அமையவேண்டுமென நான் ஆசிக்கின்றேன்.

சென்ற கால் நூற்றாண்டில் திருச்சபையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவ்விழா நாயகர்கள் திருநிலைப்படுத்தப்பட்ட காலகட்டத்திலே தான் இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பமாயிற்று. நம் எல்லோரினதும் நன்மதிப்பைப் பெற்ற 23ம் அருளப்பர் பாப்பரசர் திருச்சபையிலே ஒரு மறுமலர்ச்சியை ஆரம்பிக்கலானார். அதன் காரணமாய் மாற்றங்களும், தாக்கங்களும் — ஏன், ஏக்கங்களும் ஏமாற்றங்களும்கூட ஏற்பட்டன. ஆயினும், அவற்றிற்கு மேலாக, இறைத் திருப்பணியாளர்களினதும், இறை மக்களினதும் கடமைகளும் உரிமைகளும் வரையறுத்து வெளியிடப்பட்டுள்ளன.

நாமெல்லாம் முன்பிலும் கூடுதலான உணர்வுடன் எமது பங்கினைச் செவ்வனே செய்ய அன்னையாம் திருச்சபையினால் அன்புடன் அழைக்கப்படுகின்றோம்.

உலகிற்கு ஒளியாகவும், உப்பாகவும் இருக்கும் வண்ணம் இறைமகன் யேசு எம்மை அழைத்துள்ளார். இதற்கு மேலாக, எமது நித்திய குருத்துவத்தில் எம்மைப் பங்காளியாக்கியுள்ளார். அவரது பிரதிநிதிகளாய் நாம் உலகிலே எமது பணிகளைச் செவ்வனே செய்ய இறையருளை வேண்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எம்மை எதிர்கொள்ளும் பலவிதமான சவால்களையும் நாம் மனத் தைரியத்துடனும் தியாக சிந்தையுடனும் ஏற்று, இறைவனின் அருளை வேண்டித் திருப்தியான வகையில் செயல்புரிய இன்றே இப்போதே தீர்மானம் எடுப்போமாக.

இறைமகன் கிறிஸ்துவின் உண்மைச் சீடர்களாய் சீவிப்பதாலும் அவரை எமது எல்லாப் பணிகளிலும் பின்பற்றுவதாலும் இறைமக்களுக்கு நாம் வழிகாட்டிகளாய் இருக்க முடியும். அப்போதுதான் எமது குருத்துவம் கருத்துள்ளதாயும் அமையும்.

இன்று நாம் இவ்விழாவை, வழமைக்கு மாறாக ஆடம்பரமற்ற வகையில், அமைதியான முறையில், இச்சிற்றாலயத்தில் கொண்டாடுகின்றோம். தற்போது நமது நாட்டில் நடைபெறும் இனப்பிரச்சினை இதற்கு ஒரு காரணமாய் உள்ளது. அதேவேளையில், இது நமக்கு ஒரு சவாலாவும் அமைந்துள்ளது. இக்கால கட்டத்தில் எமது உண்மையான உறுதிப்பாட்டையும் நேர்மையான நெறிகளையும் திறமையுடன் கடைப்பிடிக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

எனவே, சகோதரர்களே! எமது குருத்துவ யூபிலி விழா நாயகர்கள் பொருட்டு இறைவனை நாம் புகழ்வோம். அத்துடன், எம் முன்னோர் ஆற்றிய அரும்பணிகளின் பயனும் நாமும் திடமுடன் இறைவனின் புகழ்ச்சிக்காகவும், மனித முன்னேற்றத்திற்காகவும் தியாக சிந்தையுடன் செயலாற்றத் திடசங்கற்பம் பூணுவோமாக !

யூபிலி நாயகர்கள் பல்லாண்டு வாழ்க !

தமிழில் :

**T. M. அன்ரனிப்பிள்ளை, LL. B.**

சில சமயங்களில் நீ செய்த குற்றத்தை மற்றவர்கள் மன்னிக்கும் அளவுக்கு, மற்றவர்கள் உனக்கு எதிராகச் செய்யும் குற்றங்களை நீ மன்னிப்பதில்லை.



# திருமலைச் செய்திகள்

புனித மரியாள் பேராலய கிறீஸ்தவ வாழ்வுச் சமூகத்தினர் ஒன்று சேர்ந்து புனித மரியாள் பங்கிலுள்ள சிறுவர்களை மகிழ்விக்கு முகமாக மாசி மாதம் 1ம் திகதி சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டி ஒன்றை நடத்தியது இவ்விளையாட்டுப்போட்டிக்குபங்குத்தந்தையாகிய வணக்கத்துக்குரிய நோபட் ஒக்கஸ் அடிகளாரும். திருவாளர் இஸ்தாக்கி நவரெட்னம் அவர்களும் பிரதம விருத்தினராக சமூகமளித்தனர்.

* *

இலங்கை மாதாவின் பிறந்த நாளை கொண்டாடுமுகமாக மாசி மாதம் 4ம் திகதி காலை 8 மணிமுதல் 12 மணி வரையும் தியான வழிபாடு ஒன்றை புனித மரியாள் பேராலய கிறீஸ்தவ வாழ்வுச் சமூகத்தினர் ஒழுங்குசெய்தனர். ஒவ்வொரு பக்திச் சபைகளும் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நேரங்களில் தியான வழிபாட்டை மிகவும் சிறப்பாக நடத்தினர்.

*

புனித மரியாள் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவிகளுடனும் புனித மரியாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்களும் சேர்ந்து, குருத்துவ வாழ்வில் 25 ஆண்டுகள் நிறைவு கண்ட திரி./மட்டுநகர் ஆயர் மேதகு யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களைக் கௌரவிக்குமுகமாக மாசி மாதம்6ம் திகதி வரவேற்பு உபசாரம் ஒன்றை அளித்தனர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதை

# சுதந்திரம்

அன்றைய பொழுது இனிமையாக புலர்ந்தது. வெளியே புள்ளினங்கள் இனிய ஒலிகளை எழுப்பிக்கொண்டிருந்தன. மலர்கள் மலரத் தொடங்கி விட்டன. இன்னும் குளிர்காற்று வீசிக் கொண்டிருந்தது. ராகவன் நன்றாக போர்வையால் மூடியபடி கட்டிலில் படுத்துக் கிடந்தான் போர்வைக்குள், அவனது இரண்டு புதல்வர்களும் தகப்பனைகட்டியணைத்தவாறு உறங்கிக்கொண்டு இருந்தனர் அன்று ஓர் சனிக் கிழமையாதலால் வேலைக்கே எழும்ப வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. இன்னும் கொஞ்சம் நேரம் சுகமாக உறங்கலாம்.

ராகவன் ஓர் அரசாங்க ஊழியன். அவனுடைய சொந்த ஊர் ஒரு கிராமமும் அற்ற பட்டினமும் அற்ற இரண்டும் கெட்டான ஊர் அங்கு கிராமம் இறந்து கொண்டிருக்க பட்டணவாடை வளர்ந்து கொண்டிருந்தது. அவனது மனைவி தேவகி. கணவனுண்டு, தானுண்டு தன் பிள்ளைகளுண்டு என்று வாழ்பவள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவன் குகன்; 5ம் வகுப்பில் படிக்கிறான். இளையவன் பரதன 2ம் வகுப்பு மாணவன்.

வானொலி தன் செய்தியறிக்கையை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. தேவகி கோப்பி தயாரித்துக் கொண்டு வந்து கணவனையும் பிள்ளைகளையும் எழுப்பிக் கொடுத்தாள்.

"குட்மோர்னிங் அம்மா, குட்மோனிங் அப்பா" பிள்ளைகள் இருவரும் சொன்னார்கள்.

"குட்மோர்னிங் எல்லாரும் கோப்பிய குடிங்க, விடிஞ்சு எவ்வளவு நேரமாயித்து..." தேவகி சொன்னாள்.

"இண்டைக்கு லீவு நாள் தானே... வெள்ளன எழும்பத் தேவல... என்னப்பா..." என்று குகன் தகப்பனை தன் கட்சியில் இழுத்துக் கொண்டான்.

"அதானே இந்த மாசம் ஒரு லீவும் இல்ல... போன மாசம் சுதந்திரதின லீவு, போயாலீவு, சிவராத்திரிலீவு, எண்டெல்லாம் லீவு வந்த. இந்த மாசம் வெறும் சனி ஞாயிறு மட்டும் தான் லீவு..." என்று ராகவன் சொன்னான்.

"அப்ப, அப்பரும் மக்களும் பத்துமணி வரை படுங்க..." என்றவாறு வெற்றுப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு தேவகி சென்றுவிட்டாள்.

"அப்பா... சுதந்திரதினம் எண்டா?" என்ன பரதன் தகப்பனைக்கேட்டான் உடனே குகன் "இலங்கை சுதந்திரம் அடைஞ்ச நாள்..." என்றான். "சுதந்திரம் என்றால் என்னப்பா?" பரதன் மீண்டும் கேட்டான்.

"நம்மள மகன், முந்தி வெள்ளக்காரன் அரசாண்டவன். அவன் நாட்ட விட்டுப் போன நாள் தான் சுதந்திர நாள்" என்று ராகவன் விளக்கம் சொன்னான்.

"அப்ப... வெள்ளக்காரன் ஆளக்கூடாதா? ரீ. வியில எல்லாம் வெள்ளக்காரன் வேற நாட்ட ஆள்றதா காட்டுறாங்களே?..." என்று குகன் சந்தேகம் ஒன்றை எழுப்பினான். "இல்ல மகன். அவன் தன்ட நாட்ட ஆளலாம். இன்னொரு நாட்டுக்கு போய் அந்த நாட்டு மக்கள ஆளக் கூடாது தானே... அந்த நாட்டுமக்கள் அடிமைகளாக இருக்க விரும்ப மாட்டாங்க தானே ... ராகவன் சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'அடிமை எண்டா என்னப்பா...?' பரதன் வினவினான்.

'உங்களுக்கு எப்படி விளங்கப்படுத்துற... சரி.. நம்மட்ட ஒரு கிளிக்கூடு இங்க இருக்குத்தானே... அதுக்குள்ள என்ன இருக்கு...?

'பச்சக்கிளி' பிள்ளைகள் சொன்னார்கள்.

'சரி... அது நம்மட கூட்டுக்குள்ள இருக்கு, அத நாம பிடிச்சி அடைச்சி வைச்சிருக்கிறம். இப்ப அந்தக் கிளிக்கு வெளியபோக ஏலாது. அது நம்மளட்ட அடிமையாக இருக்கு. அதுக்கு வெளிய போற சுதந்திரம் இல்ல... ராகவன் விளக்கினான்.

'அடைச்சி இருக்கிற மாதிரி அடிமையா இருந்தா சுதந்திரம் இல்ல... என்னப்பா?' குகன் கேட்டான். அதற்குள் இடைமறித்த பரதன் 'அப்படியெண்டா அப்பா நம்மட கந்தப்போடி பெரியய்யாட மகன பிடிச்சிட்டுபோய் கூஸாவில அடச்சி வைச்சிருக்காங்க தானே... அவருக்கும் சுதந்திரம் இல்லையாப்பா...?' என்று கேட்டான்.

'கூஸா இல்லமகன் அது பூஸா என்ற இடம் மகன். அங்கதான் கந்தப்போடி அய்யாட மகன வைச்சிருக்காங்க... அவங்களுக்கும் சுதந்திரம் இல்லதான்' என்று சொன்ன ராகவன் 'இந்த சின்னவங்களுக்கெல்லாம் என்ன மாதிரி இப்ப உலகம் விளங்குது' என்று மனதில் எண்ணிக்கொண்டான்.

'கிளிக்குத்தான் கைகால் இல்ல. அவருக்கு இருக்குத்தானே...' என்று சொன்ன பரதனை இடைமறித்த குகன் 'மடையா... அங்க ஆமிக்காவல் இருக்கும்... வெளிய வந்தா சுட்டுப்போடுவாங்க...' என்று சொல்லிமுடித்தான்.

'அண்ணைச்சி! நாமளும் பெரிய ஆளா வரப்படாது. வளந்தா நம்மளையும் பூஸாவுக்கு கொண்டுபோயிடுவாங்க' என்று பரதன் சொன்னான்.

★ ★ ★

ராகவன் மதியம் சாப்பிட்டுவிட்டு ஓய்வாக இருக்கையில் 'அப்போய்... அப்போய்...' என அழுதவாறு பரதன் ஓடிவந்தான். 'என்ன மகன்?' அண்ணன் கூட்டத் திறந்து என்ர கிளிய வெளிய பறக்க விட்டுத்தான்' என்று பரதன் அழுதான்.

'குகன் இஞ்சவா ஏன் அப்படிச் செய்தனீ...? என்று மூத்தமகனிடம் ராகவன் கேட்டான்.

**— ஆழியோன் —**

'கிளிக்கு சுதந்திரம் கொடுத்தனான்' என்று குகன் சொன்னான். அழுகையை நிறுத்திக்கொண்ட பரதன் 'ஓ! அது நல்லம்தான்... கிளி போனா பரவாயில்ல...' என்று தமையனை கட்டிக்கொண்டான். பின்னர் அண்ணனும் தம்பியும் கிரிக்கட் மட்டையுடன் வீட்டின் பின்புறம் சென்றனர்.

'பின்னேரம் நான்கு மணியளவில் தேவகி பதறியபடி ஓடிவந்தாள். 'என்னங்க... நம்மட மாட்டக்காணல?...

'என்னது காணலயா?'

மூண்டு மணிக்குத்தான் வைக்கலப்போட்டு கட்டி வைச்சனான். இப்ப அதக் காணல'

'என்னடா... புதினமா இருக்கு... குகன், பரதன்... இங்க வாங்க...' ஓடிவந்தார்கள்.

'கட்டுல கிடந்த மாட்டக் காணல கண்டீங்களா?' பிள்ளைகள் இருவரும் ஆளையாள் பார்த்தனர். பின்னர் குகன் சொன்னான் 'நாங்கதான் அவுத்து விட்டனுங்க'

'ஏன்டா!' ராகவன் கேட்டான்.

'நமக்கும் நம்மட ஆக்களுக்கும்தான் சுதந்திரம் இல்ல நம்மட கிளிக்கும், மாட்டுக்கும் சுதந்திரம் இருக்கட்டுமென்று தான் அவுத்தனுங்க...'

பிள்ளைகள் செயலால் கோபம் கொண்ட ராகவனும், மனைவியும் அவர்களின் பதிலின் அர்த்தத்தால் வசப்பட்டு நின்றனர்.

'தேவகி இதுகள பார்த்துக்க, நான்போய் மாட்ட தேடிக்கொண்டு வாறன்' என்றவாறு ராகவன் வெளியே சென்றான்.

'அண்ண! வா விளையாடுவோம்' என்றவாறு பரதனும் குகனுடன் வெளியே ஓடினான். தேவகி புன்னகைத்துக்கொண்டாள்.

(யாவும் கற்பனை)

நன்றாகச் சிந்தித்துப்பார்த்தால் கடவுள் உன் உள்ளத்தில் இல்லாதபோதுதான் அங்கே குழப்பம் ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல் விமர்சனம்

# விடுதலை இறையியல்

ஆசிரியர் : **வி. பி.**

நூலின் விலை : **10/-**

முகவரி : அ. ம. தி. பயிற்சியகம்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இறைவன் என்பவனின் காலடித்தடங்கள் வரலாற்றில் இடம் பெற்றிருக்காவிட்டால் மனிதன் என்ற சொல்லுக்குப் பொருள் இருந்திருக்காது.

அடிமை என்ற சொல், மனித வரலாறு எனும் அகராதியிலே இடம் பெற்றிருக்காவிட்டால் விடுதலை என்ற சொல் பிறந்திருக்காது. இறைவனும் மனிதனும் சந்திக்குமிடத்துத்தான் விடுதலை இறையியல் என்ற கருத்து உதயமாகின்றது.

இத்தகைய மாபெரும் கருத்தினைக் கருப்பொருளாகக் கொண்டு மனித சமுதாயத்தையே விழிப்புறச் செய்யும் நோக்குடன் எமது சிந்தனையைத் தூண்டிவிடுகின்றார் விடுதலை இறையியலின் ஆசிரியர்.

மனிதன் மனிதனை மனிதனாக மதிக்கும் காலம் மங்கிப்போய்க் கொண்டிருக்கும் இக்காலகட்டத்திலே மனிதன் தன் மாண்பினை உணர்ந்து, விழிப்புணர்ச்சி பெற்று செயல்பட ஊக்குவிக்கும் மாத்திரையாக இந்நூல் படைக்கப்பட்டுள்ளது. இன்றைய காலத்துக்குப் பொருத்தமான நூல். இன்று மனிதன் பலவித அடிமைத்தளைகளினால் கட்டுண்டு, வன்முறைச் செயல்களினால் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு தனது மகத்துவத்தையும் மாண்பினையும் இழந்து விடிவை எண்ணி ஏங்குகின்றான். இன்றைய சமுதாய அமைப்பு இதனைப் பிரதிபலிக்கின்றது. சமுதாயம் விடுதலைபெற வேண்டின் தனிமனிதனின் மாண்பு மதிக்கப்பட்டு மனிதன் மனிதனாக வாழ வழிவகுக்கப்படவேண்டும். அதாவது அவன் விடுதலை பெற வேண்டும். புது மனிதனாக வேண்டும். இத்தகைய இலட்சியத்தினை மனிதன் அடையமுடியும். மனிதனுக்கும் அவன் வழியாக அவனிக்கும் ஒரு விடிவு உண்டு என்பதை புது மனிதன் கிறிஸ்து விடுதலையின் வீரனாக: விடுதலையின் ஆதாரமாக, விடுதலையின் வழிகாட்டியாகத் துலங்குகின்றார் என்பதை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இறையியல் என்பது கற்றோரும் பெரியோரும் மட்டுமே உண்ணக்கூடிய கெட்டியான உணவு என்ற கருத்தினை மாற்றி சாதாரண மக்களும் அருந்தக்கூடிய பாலுணவு என்ற முறையில் இறையியல் கருத்துக்களை எளிய நடையில், எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் படைப்பதற்கு ஆசிரியர் முனைந்திருக்கிறார் என்று சொன்னால் மிகையாகாது. ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது. ஆயினும் இன்னும் ஒருபடி முயன்றிருந்தால் அனைவரையும் கவரக்கூடிய முறையில் பல்சுவையுடன் படைத்திருக்கலாம்.

தான் எடுத்துக்கொண்ட கருத்தினை ஆழமாகவும் உறுதிப்படுத்தவும் தக்க ஆதாரங்களை வேதாகமத்திலிருந்தும், திருச்சபையின் படிப்பினைகளிலிருந்தும் பிற இறையியல் வல்லுநர்களின் கருத்துக்களிலிருந்தும் பயன்படுத்தியிருப்பது இந்நூலின் மதிப்பை உயர்வடையச் செய்கின்றது. இந்நூல் தமிழ் மொழியில் படைக்கப்பட்டிருப்பதனால், தமிழர் பண்பாடு, கலாச்சாரங்களிலிருந்தும் தமிழ் பேரறிஞர்களின் கருத்துக்களிலிருந்தும் அரிய பெரும் ஆதாரங்கள் எடுத்து கையாளப்பட்டிருந்தால் இன்னும் பல இதயங்களைத் தொடக்கூடியதொன்றாக இந்நூல் அமைந்திருக்கும் என எண்ணுகின்றோம்.

சுருக்கமாகச் சொல்லப்போனால் பாலும் தேனும் பருப்பும் கலந்துள்ளது. பாகும் கலந்திருந்தால் இன்னும் சுவையாக இருந்திருக்கும். ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கது. இறையியல் என்பது இறைவனை மட்டும் மையமாகக் கொண்டது என்ற பரம்பரைக் கருத்துக்கு கல்லறை கட்டிவிட்டு இறைவனையும் மனிதனையும் மையமாகக் கொண்டதுதான் இறையியல் என்ற அடிப்படைக் கருத்தினை விளக்கி, இறைவனும் மனிதனும் சந்திப்பதுதான் விடுதலை இறையியல் என்ற கருத்தை தத்ரூபமாக காட்டியிருக்கின்றது. ஆசிரியரின் கருத்தினை ஒரே பார்வையில் நோக்கவேண்டுமாயின் நூலுக்குப் பொருத்தமாக அமைந்துள்ள அட்டைப்படம் அதனை இலகுவாக்குகின்றது

விடுதலை என்னும் விடிவெள்ளியை நோக்கிப் பயணம் செய்யும் ஒவ்வொருவரும் கைத்துணையாக, பயணக் குறிப்பாக, வரைபடமாக உடன் கொண்டுசெல்லவேண்டிய நூல் இதுவாகும் என்று கூறுவதோடு அனைவரும் இதனைப் படித்து முழு விடுதலை பெறவேண்டும் எனவும் ஆசிக்கின்றோம். இதனைப் படித்து இன்புற்றவர்கள் இதற்கு விலை பேசமாட்டார்கள்.

**அருள்திரு. பி. ஜோசப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விருந்தோம்பல்

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்றூர் அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவைப் பாட்டி.

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம், விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' என்று கூறினுர் குறள் தந்த வள்ளுவப் பெருந் தகை.

'தனி ஒருவனுக்கு உணவிலே எனில்
ஜகத்தினை அழித்திடுவோம்'
என்று பாடினுன் அமரகவி பாரதி.

அதேவேளை அன்னம் இட்ட வீட்டில் கன்னக்கோல் சாற்றும் கயவர் கூட்டமும் உண்டு. இருப் பினும், தானங்களில் சிறந்த தானம் அன்னதானம் அல்லவா? இதை உணர்ந்தவர் சிலர்; உண ராதவர் பலர். அதனுற்ருன் என் னவோ இந்த அன்னதானம் அதா வது விருந்தோம்பல் பலவித உரு வங்களில் படாதபாடு படுகின் றது.

இன்று நம்மிடையே பலர் அன்னதானம் கொடுத்துத் தமது அன்பை வெளிக்காட்டுகின்றனர். பல்வேறு நோக்கத்துடன் அன்ன தானத்தில் ஈடுபடுகின்றனர். உற வினர்களுக்கு உண்டி அளிப்பவர் சிலர்; நண்பர்களுடன் விருந்தாடு பவர் சிலர்: பணம் படைத்த பெரும் புள்ளிகளுக்கு விருந்தளிப்பவர் சிலர்; சுயலாபம் கருதி அரசியல்வாதிகளுக்கு விருந்தளிப்பவர் சிலர். அதே வேளை ஏழைகளுக்கு தருமம் செய்பவர்களும் இருக்கத் தான் செய்கிருர்கள். இவர்களில் பலர் தம்மை விளம் பரப்படுத்தும் நோக்குடனும், நாலுபேர் அதைப்பற்றிக் கதைப்பதற்காகவும் விருந்தோம்பலைப் பயன்படுத்துகிருர் கள். இவர்கள் மனிதர் முன் புகழும், மகிமையும் பெறு வதற்காக ஏழைகளைப் பகடைக்காய்களாகப் பாவிக்கின் றனர்.

"உனக்கு மற்றவர்கள் எதைச் செய்யவேண்டுமென்று விரும்புகின்ருயோ, அதையே நீயும் மற்றவர்களுக்குச் செய்" என்றியம்பிய இயேசு தமக்கு ஏதாவது கைம்மாறு கிடைக்கும் என்ற நோக்குடன் இவ்வித கபட நாடகம் புரியும் சூத்திரதாரிகளை வன்மையாகக் கண்டிக்கிருர். கிறிஸ் தவ விருந்தோம்பலுக்கு இச்செய்கை முற்றிலும் முரணுனது.

பரிசேயர்களுக்குத் தலைவனுன ஒருவன் இயேசுவை விருந்துக்கு அழைத்திருந்தான். அழைப்பை ஏற்ற எம்பெருமான் அங்கு சென் ருர். விருந்துக்கு அழைக்கப்பட் டோர் உணவு மேசையில் முதலிடம் பெறுவதற்காக முண்டி அடித்துக் கொண்டு முன் சென்றதை அவதா னித்தார். இத்தகைய கௌரவத் தைத் தேடவேண்டாம் என அவர்

## அ. பி. றஞ்சன் குரூஸ்
வாழைச்சேனை.

களுக்கு அறிவூட்டிய இயேசு பணம் படைத்தவர்களை விருந்துக்கு அழைக்கவேண்டாம் என்றும், ஏழை களுக்கு உணவு கொடுக்கும்படியும் விருந்துக்கு அழைத்த பரிசேய தலை வனுக்குக் கூறினுர்.


கைம்மாறை எதிர்பார்க்காமல் உபசரித்தலே உண்மையான கிறிஸ் தவ விருந்தோம்பல். யாருக்கு விருந் தளிக்க வேண்டும் என்பதைப் பரி சுத்த வேதாகமம் வழியாக இயேசு குறிப்பிட்டிருக்கிருர்.

"நீ விருந்து நடத்தும்போது ஏழைகள், ஊனர்கள், முடவர்கள், குருடர்கள் ஆகியோரைக் கூப்பிடு. அப்போது நீ பேறு பெற்றவன். ஏனெனில், உனக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நீதிமான்கள் உயிர்த்தெழும்போது உனக்குக் கைம்மாறு கிடைக்கும்."
(லூக். 14 : 13 - 14)

எனவே இறை உரைத்த விருந் தோம்பலைச் செவ்வனே செய்வோ மாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பலியும் வாழ்வும்

அன்புறவுகள் சில அடையாளங்களால் தான் இனங்காட்டப்படுகின்றன. 'நானும் நீயும் ஒருவரை ஒருவர் அன்பு செய்வோம்' என்று உடன்படிக்கை கொள்ளும்போது அன்பு என்னும் அகவுணர்வு சில அடையாளங்களால் தொட்டுககாட்டப்படுகிறது.

ஒரு தாய் தன் குழந்தைமீது கொள்ளும் அன்பை பாலூட்டுவதாலும், முத்தங்களைச் சொரிவதாலும், பகலிரவாய்க் கண்விழித்து பாதுகாத்து வளர்ப்பதாலும் இதுபோன்ற இன்னும்பல புறச் செய்கைகளாலும் வெளிப் படுத்துகிருள். இதுபோன்றே, காதலர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் தம் அன்பை - உறவை அடையாளங்களால் வெளிப் படுத்தி (எ+டு. விருந்து கொடுத்தல் — பரிசு வழங்கல்) மகிழ்கின்றனர். மேலும் மேலும் வளர்க்கின்றனர்.

மனிதன் இறைவனது அன்பை உணரத் தலைப்பட்ட நாள் முதல், தன் அன்பை அடையாளங்களால் வெளிப்படுத்திஞன். இதுவே பலி, வழிபாடு, ஆராதனை என்று கொள்ளப் பட்டது. இறைவன் பால் தம் உள்ளத்தில் பொங்கும் அன்பைக் காட்ட, அவர் தனக்குச் செய்யும் அளப்பரும் நன்மைக்கும், கருணைக் கும் நன்றியைக் காட்ட, அன்பு செய்த நெஞ்சுக்குத் துரோகம் செய்தபோது அதற்காக வருந்திப் பரிகாரம் தேட என அகத்தே பொங்கும் உணர்வுகளுக்கு அடையாளமாக பலி செலுத்திஞன்.

திருநூலிலே காயினும் ஆபேலும் செலுத்திய பலி முதல், கிறிஸ்து கல்வாரிக் குன்றிலே தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்ததுவரை பலியின் கதை மிக நீண்ட விளக்கம் பெற்றுள்ளது.

பலி என்பது வெறும் அடையாளம் மட்டுமன்று, அது ஆதாரமும்கூட. தன்னை இறைவனுக்கு முழுமையாக ஒப்புக்கொடுத்தலிற்ருன் பலி ஆதாரமாகி நிறைகிறது. அந்நிறைவைக் கல்வாரிக் கிறிஸ்துவிலே நாம் காண்கிருேம்.

பழங்காலத்தில் இறைவனுக்குப் பலி செலுத்த விரும்பிய மக்கள் ஆடு, மாடு போன்ற விலங்குகளை — பறவைகளை, ஏன் மனித உயிர்களைக்கூட பலியாகச் செலுத்தினர். இன்றும் சில நாடுகளில் சில மக்கட் கூட்டங்களில் இவ்வழக்கம் உண்டு என்று அறிய முடிகிறது. ஆயினும், இன்று இவ்வாறு உயிர்களைக் கொன்று வழிபாடியற்றுதல் காட்டுமிராண்டித்தனம் என்று கண்டிக்கப்படுகிறது. தடை செய்யப்படுகிறது. ஆஞல், இவ்வாறு உயிர்களைக் கொன்று பலி செலுத்தும் வழக்கம் ஏன் ஏற்பட்டது? இதன் பின்னணி என்ன என்பது ஆய்வுக்குரியது. அவற்றில் சில அர்த்தமுள்ள உண்மைகளுமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடவுள் என்னும் மகாசக்தியை மனிதன் அறிந்து உணர்ந்து அனுபவித்த பின், அன்பு கொண்டு தொழ முயன்றபோது — காணிக்கை செலுத்த முயன்றபோது, எல்லாம் நிறைந்த அளவற்ற அப்பரம்பொருளுக்கு எதைக் கொடுப்பது என்ற ஏக்கம் அவனுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். அந்த மாபெரும் அன்புச் சக்திக்கு மிக அரிதான-அருமையாக போற்றுகின்ற ஒன்றைக் காணிக்கையாக்க அவன் எண்ணியிருப்பான். ஒவ்வொரு மனிதனும் மிக அருமையாகப் போற்றி வளர்த்து காக்கின்ற இணையற்ற ஒன்றெனில் அது அவனது உயிராகத்தானே இருக்கமுடியும். ஆனால் தன்னுயிரைத்தானே எப்படிக் கொடுப்பது? இயலாதல்லவா? அதனால்தான் அருமையாகப் போற்றி வளர்க்கின்ற — அன்று பெருஞ் செல்வமாகவே கருதப்பட்ட ஆடு, மாடு போன்ற விலங்குகளைத் தனக்குப் பதிலாக, தன்னுயிர்க்கு ஈடாக இறைவனுக்குப் பலிகொடுத்தான். அன்பில் விளைந்த அகக் கொடுத்தலுக்கு பலி ஓர் அடையாளமாக — புனிதம் மிக்க ஒரு சடங்காக விளங்கியது. இறைவனும் இதை விருப்போடு ஏற்றுக்கொண்டான். இங்கு பலியாகும் பொருளல்ல; பலி கொடுக்கும் உள்ளமே முக்கியமானது.

ஆபேலின் பலியை, நோவாவின் பலியை, ஆபிரகாமின் பலியை இறைவன் ஏற்றுக்கொண்டான் எனில் அவர்களை — அவர்களது தூய்மையான, அன்பு நிறைந்த உள்ளத்தை ஏற்றுக்கொண்டான் என்பதே பொருளாகும். காயினின் பலியை அவனது தீய உள்ளத்தினால்தான் இறைவன் ஏற்றுக்கொள்ளவில்லை.

இவ்வாறு உளக் கொடுத்தலுக்கு சான்றாக, ஓர் அடையாளமாக நின்ற பலியும் வழிபாடும் காலப்போக்கில் தம் பொருளை இழந்து வெறும் சடங்காக மாறியது. கடன் கழிப்புக்கும், கௌரவத்துக்கும், சுய இச்சைகளுக்கும் வழிபாடுகள் துணைபோயின. தமது தீய நோக்கங்களுக்கு இறைஅருள் வேண்டி பலி செலுத்துமளவுக்கு அவை போலியாயின; காணிக்கை இலஞ்சமாகியது.

இவ்வாறு வழிபாடு அதன் அர்த்தத்தை இழந்து உருமாறியபோது இறைவன் அதை வெறுத்து ஒதுக்கினான். 'உங்கள் பலிகளை நாம் விரும்பவில்லை. அவை எமக்கு அருவருப்பாயிருக்கின்றன. நாம் விரும்புவது ஆட்டுக்கிடாக்களின் இரத்தமும் தூபங்களுமல்ல உங்களது நீதியான வாழ்வை, தூய்மையான உள்ளத்தையே' என்று உறுதியாக — வெளிப்படையாகவே கூறினான். தம் ஒரே மகனையே இவ்வுலகுக்கு அனுப்பி உண்மையான — முழுமையான பலி இதுதானென்று எடுத்துக்காட்டினான்.

பலி என்னும் செயலுக்கு கிறிஸ்து கல்வாரியிலே வரைந்த இலக்கணம் அற்புதமானது. இறைவனுக்கு நம்மை முழுமையாக அர்ப்பணிப்பது 'பலி' என்பது ஒரு விளக்கமெனில், கிறிஸ்து இன்னும் ஒருபடி மேலாக பிறனுக்காக — சமூகத்துக்காக நம்மை முழுமையாக இழப்பது — இறைவனிடம் கையளிப்பது உயர்ந்த பலியென புது விளக்கமளித்தார். 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என வாழ்ந்துகாட்டினார்.

எனவே பலி என்பது தன்முனைப்பாடு கொண்டதல்ல. ஒரு சடங்குமல்ல. அது ஒரு வாழ்வு, அயலானோடு, சமூகத்தோடு தன்னைப் பகிர்ந்துகொள்ளும் வாழ்வு. இது சமூக சேவையல்ல. இறைவனுக்காக, இறைவனையே முன்நிறுத்தி சமூகத்தோடு இணைந்து நம்மைப் பகிர்ந்துகொள்ளும் வாழ்வு — பலியாக்கும் வாழ்வு. இப்பலியின் முழுமையைக் கண்டவர் கிறிஸ்து ஒருவரே. அம்முழுமையில் பங்குபெற கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பொறுப்புண்டு; அழைப்புண்டு இது சுலபமானதல்ல. மிகக் கஷ்டமானது. நோவும், இழப்பும் கொண்டது. இதுவே தவம், இதுவே ஒறுத்தல், இதுவே இறைவன் விரும்பும் அர்த்தமுள்ள பலி.

இறந்துவிடுவோமோ என்று அஞ்சுவதைவிட்டு, இறந்த பிறகு இறைவனைப் பிரிந்துவிடுவோமோ என்பதை எண்ணி அஞ்சு.

அழுகிறவர்களை எல்லாம் நம்பிவிடாதே. காரணம், சிலர் அடிப்பதுபோல் அடிக்க சிலர் அழுவதுபோல் அழுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பின்னணியில் எம் வழிபாடுகளை, ஆராதனைகளை — பலிகளை ஒப்பிடும்போது பலி பற்றிய எமது எண்ணங்கள் எங்கோ ஓரிடத்தில் 'பசிறு' அடிக்கவே செய்யும்.

மெழுகுதிரி எரித்து, காணிக்கை போட்டு, பாண் கொடுத்து, நற்கருணை வாங்கி, ஞாயிறு, கடன் திருநாட்களில் 'கடன் கழித்து' இறைவன் அருளை 'வாங்கி' விடலாம் என்று நினைப்பது ஒரு பரிதாபமான மூடத்தனந்தானே!

இறைவன் வியாபாரியல்ல; எமது காணிக்கைகளை வாங்கிவிட்டு நாம் கேட்கும் பொருளைக் கொடுப்பதற்கு. கிறீஸ்து கூறியதுபோல் அவன் அன்புள்ள தந்தை. அங்கு அன்பில் கொடுத்து அன்பில் எடுக்க முடியுமே அன்றி அர்த்தமற்ற சடங்குகளால் அல்ல. அவைகள் இறைவன் முன்னால் விலைபோகாத வெறுக்கத்தக்க ஆடம்பரங்கள். சுவாமி விபுலானந்தர் கூறுவதுபோல் :

வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் இணையடிக்கு
வாய்த்த மலரெதுவோ
வெள்ளைநிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது.

ஆகவே, நாம் மாறவேண்டும். எமது பலிகள் அர்த்தமுள்ளதாகட்டும் அது அன்பின் கொடுத்தலாகட்டும்.

**மலர்வேந்தன்.**

உன் வாழ்க்கை எதிர்காலத்தில் சரித்திரமாக விளங்க வேண்டுமானால் இன்று உன் வாழ்க்கையில எந்தவித கதையும், கற்பனையும் புகுந்துவிடாமல் பார்த்துக்கொள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

ஓராண்டு இறைபத வாழ்வில் - உங்கள்
ஓராண்டு ஓடி மறைந்தது
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
எம் உள்ளத்தில் நீங்கா இடம் பிடித்து
இறைபதம் ஏகிய அன்புச் சகோதரர்களே!
மனைவிமார், பிள்ளைகள் உறவினர்கள் தேட
ஊரார் அனைவரும் தவிக்கின்ற நேரத்திலும்
உங்களை ஒருகணமும் நாங்கள் மறந்ததில்லை
உயிர் உள்ளவரை மறக்கவும் மாட்டோம்
நித்திய வாழ்வுபெற்று
நித்தமும் அவர் ஒளியில் வாழ
தினமும் நீங்கா நினைவில் வேண்டுகின்றோம்
எம் பிரான் யேசுவை!

சென்ற வருடம் மாசி மாதம் 19ம் திகதி உடும்பன் குளத்தில் 106 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது. நம் அனைவருக்கும் தெரிந்த செய்தி. அளிகம்பையிலிருந்து 8 பேர் இங்கு வேளாண்மை வேலைக்காக சென்றிருந்த சமயம் இவர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் இறைபதம் சேர்ந்து ஓராண்டு நினைவாக அன்றைய தினம் அளிகம்பை புனித சவேரியார் ஆலயத்தில் பகல் 12 மணிக்கு இந்த 8 சகோதரர்களின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கூட்டுத் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந் நாளை சிறப்பிக்க முன்னாள் அளிகம்பை பங்குத்தந்தையர்களான அருட்திரு. குக் அடிகளாரும், அருட்திரு. டயஸ் அடிகளாரும், அருட்திரு. பிலிப் அடிகளாரும் அக்கரைப்பற்று தற்போதைய பங்குத் தந்தையர்களாகிய அருட்திரு. மரியதாஸ், அருட்திரு. அன்னதாஸ் அடிகளாரும் இக் கூட்டுத் திருப்பலியில் கலந்துகொண்டார்கள். திருப்பலி முடிவடைந்ததும் குழு வாழ்வு சகோதரிகளின் தலைமையில் அளிகம்பை மக்கள் அனைவருக்கும் தேவாலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டது.


**தபெலர் குழுவாழ்வு சகோதரிகள்**
**அளிகம்பை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 39

(எபேசியருக்கு எழுதிய திருமடல்)




பரிசு :

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**30 - 3 - 87**

முழுப்பெயர் : ..........................................................................................

முகவரி : ..........................................................................................

..........................................................................................

## இடமிருந்து வலம்

1. எபேசு நகர இறைமக்களுக்கு சின்னப்பர் இவற்றில் நன்றி கூறுகின்றார்.
3. உடலை இறுக்கிப் பிணைப்பது மாறி நிற்கின்றது.
5. இறைவனின் இச்செயலினால் இறைமக்கள் உருவானார்கள்.
6. இவர்களுக்கு உதவ விரும்புபவர்கள் பாடுபட்டு உழைக்க வேண்டுமாம்.
7. எபேசு நகர இறைமக்கள் இதனைக்கேட்டு விசுவாசம் கொண்டு பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக்கொண்டார்கள்.
9. பார்வைக்கு உதவுபவை பாதை தடுமாறி நிற்கின்றன.
10. சுத்தத்தை மிகைப்படுத்தப் பயன்படுத்தப்பட்ட சொல்.
11. கடவுளின் சொல் இதற்கு ஒப்பானது என்கின்றார்.
12. இம்மடலுக்கு உரிய இறைமக்களின் இடம்.
14. எதன் கனிகளும் தலைகீழாக நின்றால் இதே கதிதான்.
15. இதனைத் தாங்குவோர் தூதரிலும் இருந்தனர்.
16. உலகின் முடிவுத் தினத்தைக் குறித்து நிற்பது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### மேலிருந்து கீழ்

1. கிறிஸ்துவிடம் இவை அளவிடமுடியாத படி உள்ளன;
2. மனைவியைத் தம் சொந்த உடலாகக் கருத வேண்டியவர்கள்.
4. திருச்சபையாகிய உடலுக்கு கிறிஸ்து இவ்வாறு செயல்படுகின்றார்.
8. உரிமைப் பேற்றுக்கு தகுதியானவர்களை இப்படியும் அழைப்பர்.
13. ஒளியின் கனிகளுள் ஒன்று.

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 37.

## முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. பலகை
5. நன்கொடை (ன்நடைகொ)
7. மேன்மை
8. கூடை
9. நன்றி
10. பணி (ணிப)
12. வரம்
13. முகம்
14. பக(ல்)
15. ஏவாள் (ஏள்வா)
16. புறணி

**மேலிருந்து கீழ்**

1. அன்பு
2. படைப்(பு)
3. கன்னி
4. சுமை
6. நற்சான்று
7. மேலுடை
8. கூடாரம்
9. தன்மை
10. பலகணி
13. முள்

## பரிசு பெறுவோர் :

**1ம் பரிசு :**

பி. தியாகராஜா O. I. C.
தச்சுப் பயிற்சிப் பாடசாலை,
வாகரை.

**2ம் பரிசு**

செல்வி அ. கலிஸ்ரா சுபாஷினி
B.L./47, 5வது அவெனியு,
அம்பாறை.

**பாராட்டுப் பெறுவோர் :**

1. இராயப்பு மிக்கேல்
தாழங்குடா - 2,
காத்தான்குடி.

2. ஜெ. சுபாஸ்கர்
6/1, முதலியார் தெரு,
மட்டக்களப்பு.

3. செல்வி ரஞ்சனி ஜோண்
96/4, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

4. அவுலின் ஜெயமலர்
சொறிக்கல்முனை,
சம்மாந்துறை.

5. அமிர்தராஜ் எரிக்
இல. 3, நொத்தாரிசு ஒழுங்கை,
மட்டக்களப்பு.

பங்குபற்றியவர்கள் 43.

சரியான விடை அளித்தோர் 26.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## இவருக்கு சமர்ப்பணமா?

பொங்கல் மலர் கண்ணுற்றேன். ஆனந்தா A. G. இராஜேந்திரத்துக்கு இம்மலர் சமர்ப்பணமோ? என ஐயுறவேண்டியுள்ளது.

செல்வி யோகராணி பிரான்சிஸ்
பாத்திமாபுரம்.

## பிடித்தது இதுதான்

தை மாதத் தொண்டனில் எனக்குப் பிடித்தது இஸ்ராயேல் மக்களும் - இன்றைய நம் ஈழமக்களும் என்ற கட்டுரைதான்.

எஸ். ரவீந்திரராஜ்
வீச்சுக்கல்முனை.

## நன்றி!

பொங்கல் மலர் பாராட்டக்கூடியது. அதில் 'இதுதான் பொங்கல்' 'எண்ணிப் பார்க்கையில்' போன்ற ஆக்கங்களைத் தந்தவருக்கு நன்றி.

செல்வி க. தயா
கல்லடி.

## மொத்தமாக ஒரு....!

கடந்த ஆண்டு முழுவதும் மாதந்தவருது 'தொண்டனை' வெளியிட்டமைக்கு எனது நன்றி. கடந்த காலங்களில் தொண்டனில் நான் சுவைத்த ஒவ்வொரு ஆக்கமும் மிக நன்று. அவைகளை அளித்தவர்களுக்கு எனது பாராட்டும் நன்றியும்.

உதயகுமாரி இம்மானுவேல்
வந்தாறுமூலை.

## தொடரட்டும்

தைமாத தொண்டனில் ஆனந்தா A. G. இராஜேந்திரம் எழுதிய 'கத்தோலிக்க திருச்சபை தேய்கிறதா' என்ற கட்டுரையை வாசித்து வியந்தேன். இவர் ஆராய்ச்சி மேலும் தொடர இறைவனை வேண்டுகிறேன்.

திருமதி பூரணம் தவராஜா
மட். தேத்தாத்தீவு.

## என்ன பொருத்தம்!

தை மாதத் தொண்டனில் வெளிவந்த சிறுகதை இக்காலகட்டத்திற்கு மிகவும் பொருத்தமானது.

எஸ். ஜெஸ்மின்
வீச்சுக்கல்முனை.

பேசாதவர்களை பேச வைக்கும் ஆற்றல் கடவுளுக்கு உண்டு. பேசுகிறவர்களை பேசாமல் இருக்கச் செய்கின்ற ஆற்றல் மனிதனுக்கு உண்டு.

'மனிதர்களை அன்புசெய்ய வேண்டும்' என்று கூறுகின்ற நீ முதலில் உன்னையே அன்புசெய்யக் கற்றுக் கொள் — நீயும் மனிதன்தானே!

'நான்' இல்லாமல் நீயிருந்தால் 'நான்' உன்னோடு வாழ்கிறேன் என்கிறான் இறைவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Registered as a News Paper in Sri Lanka.



# காற்றில் கலந்து வரும்

நாள்: 3 - 3 - 87 நேரம்: மாலை 6.45 மணி

**சிறுவர் உலகம்**

சிறப்பு: 'அயலவனில் யேசு' — சித்திரம்

நாள்: 8 - 3 - 87 நேரம்: மாலை 7.00 மணி

**புதிய உலகம்**

நாள்: 14, 15, 16-3-87 நேரம்: காலை 5.50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர்: அருள்திரு பி. ஜோசப் அவர்கள்

நாள்: 17 - 3 - 87 நேரம்: மாலை 6.45 மணி

**சிறுவர் உலகம்**

சிறப்பு: 'வீட்டுக்கொரு விவிலியம்' — சித்திரம்

நாள்: 22 - 3 - 87 நேரம்: காலை 7.00 மணி

**புதிய உலகம்**

சிறப்பு: 'பைத்தியங்கள்' — நாடகம்

நூல் விமர்சனம்

## முக்கிய அறிவித்தல்

பங்குனித் திங்கள் 4ம், 6ம், 13ம், 20ம், 27ம், திகதிகளில் மாலையில் தவக் காலச் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகும். ஒலிபரப்பாகும் நேரம் இதுவரை எமக்குக் கிடைக்காதவால் குறிப்பிடமுடியாமைக்கு வருந்துகிறோம்.

மலர்வேந்தன்.

இச்சஞ்சிகை, மட்டக்களப்பு புனித செபஸ்தியான் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 4-3-87ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media